பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 13 வெள்ளிக்கிழமை 26.02.2021 கதிர் 113

இ
னி
து
ரகசியம்
அல்ல!

‘சோழியன் குடுமி சும்மா ஆடாது’ என்பார்கள். அது சரிதான்.

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களையும் அடக்கம் செய்ய விட மாட்டோம், எரிப்பது கட்டாயம் என்று ஒரே பிடியில் நின்றது கோட்டபாய அரசு. பக்கம்02 »

## தேசிய வெசாக் நிகழ்வு இம்முறை நயினாதீவில்; வடக்கில் 65 விகாரைகளில் விசேட பூஜைகள்!

### முல்லைத்தீவு குறுந்தூர் விகாரையிலும் சிறப்பு வழிபாடு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.26


தேசிய வெசாக் பண்டிகை நிகழ்வை நயினாதீவில் நடத்துவதோடு அதேசமயம் வடக்கில் உள்ள 65 பௌத்த விகாரைகளிலும் விசேட பூசை வழிபாடுகளை மேற்கொள்ள அலரி மாளிகையில் நேற்று மாலை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெசாக் பண்டிகை சர்வதேச பண்டிகையாக ☞2

## கச்சதீவு உற்சவம் இம்முறை பக்தர்களின்றியே நடக்கும்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.26



கச்சதீவு புனித்அந்தோனியார் ஆலய உற்சவத்தை பக்தர்கள் இன்றி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் நேரில் ஆராய படகு ஒன்று நேற்றுக் காலையில் காங்கேசன் ☞2

# ஜெனிவாப் பிரேரணையின் வெற்றிவாய்ப்பு ஊசலாட்டம்

## இஸ்லாமிய நாடுகளின் முடிவு தெளிவில்லை

ஜெனிவா, பெப்ரவரி 26

**ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை வெற்றிபெறுமா என்பது ஊசலாட்டத்தில் இருப்பதாக அவ்விடயத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.** ☞2

## காணாமல் போனோரது உறவுகளை சந்திக்கின்றார் ஜனாதிபதி கோட்டா

காணாமல் போனோரது உறவினர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் சந்திக்கவிருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே இதனை தெரிவித்திருக்கிறார்.

அவர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் சந்திக்க இருக்கிறார் எனவும், அவர்களுடைய பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஜனாதிபதி எதிர்பார்த்திருக்கிறார் எனவும், ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் அவர்களை நேரடியாக சந்தித்து அரசியல்வாதிகள் கூறுகின்ற கருத்துக்களுக்கு அப்பால் அவர்களுடைய உண்மையான ☞2

## தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஜெனிவாவில் இந்திய வலியுறுத்து

### இராஜதந்திர சொல்லாடலில் கருத்துரை




ஜெனிவா, பெப். 26

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46 ஆவது அமர்வில் நேற்றுப் பிற்பகல் இலங்கை தொடர்பாக விவாதத்தில் உரையாற்றிய இந்தியாவின் ஜெனிவா பிரதிநிதி, இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளை அங்கு வலியுறுத்தியிருக்கின்றார்.

இலங்கை பற்றிய ஐ.நா. மனித உரிமைகள் ☞11

## கொரோனாவில் உயிரிழப்பவர்களின் சடலங்களைப் புதைக்கவும் அனுமதி

### வெளியாகிறது விசேட வர்த்தமானி அறிவிப்பு

கொரோனாத் தொற்றினால் உயிரிழப்பவர்களின் சடலங்களை புதைப்பதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிப்பதெனத் தீர்மானித்துள்ளது.

இந்தத் தகவலை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன நேற்றிரவு ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் நேற்று நள்ளிரவு வெளியாக இருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்த தகவலை கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி வெளியிட்டார் எனவும் சந்திரசேன தெரிவித்துள்ளார்.

ஜெனிவா மனித ☞2

## பின் தொடர்ந்த பொலிஸை நோக்கித் துப்பாக்கிச் சூடு!

### வத்தளையில் தப்பிச் சென்றது மர்ம கார்!

கார் ஒன்றை வாகனத்தில் பின்தொடர்ந்துசென்ற பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் வத்தளை நகர் மத்தியில் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மூன்று முறை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் அந்தக் கார் பெஹலியகொடை நோக்கித்தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தான் நியமித்த ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரித்த மைத்திரி

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை சு.க. நிராகரித்துள்ளது.

இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று மாலை கூடியது.

அதன்போதே, மேற்படி ஜனாதிபதி ஆணைக் ☞2

## வெளியானது வர்த்தமானி

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உயிரிழப்பவர்களின் உடல்களை ☞2

## சு.கவின் தலைவராக தொடர்ந்தும் மைத்திரி

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி ☞2

## தெல்லிப்பளை வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம்தெல்லிப்பளை வைத்தியசாலையில் கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்தியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சில நாள்களுக்கு முன்னர் கொழும்பு ஆசிரி வைத்தியசாலைக்கு சென்ற நபர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறுபான்மையினரான முஸ்லிம்களை காழ்ப்புணர்ச்சியோடு அவமானப்படுத்தும் சின்னத்தனமான - பேரினவாத வெறிப்போக்கான – நடவடிக்கையாகவே அது இலங்கையில் நீடித்தது.

இந்த விதி இப்போது திடுதிப்பென விலக்கப்பட்டிருக்கின்றது.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இங்கு வந்து நேரடியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து விநயமாகக் கேட்டுக் கொண்டதன் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்பது சுத்தப் பொய்.

அல்லது இருபதாவது அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் எம்.பிக்களின் விநயமான கோரிக்கையை ஏற்று ஒப்புக்கொண்டிருந்த அரசுத் தலைமை, தான் ஏற்கனவே அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் இந்தக் கட்டுப்பாட்டை இப்போது தளர்த்துகின்றது என்பதும் பீலாக் கதை.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தனக்கு எதிராகத் திரண்டு ஜேர்மன், பிரிட்டன், கனடா, மொன்ரிநிக்காரோ, மஸிடோனியா ஆகியவை சமர்ப்பித்துள்ள பிரேரணையால் சர்வதேச அரங்கில் பெரும் நெருக்கடியையும் இக்கட்டையும் எதிர்கொண்டுள்ள கொழும்பு அரசு, ஜெனிவா இக்கட்டிலிருந்து தப்புவதற்காக இஸ்லாமிய நாடுகளின் ஆதரவை வேண்டி அவற்றின் காலில் விழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

நாட்டில் கொரோனா காவு கொண்ட முஸ்லிம்களின் சடலங்களை எரிக்கும் உத்தரவை விடுத்து – அதன் மூலம் உள்நாட்டில் பெரும் முஸ்லிம் எதிர்ப்புணர்வை சம்பாதித்து வைத்துள்ள – கோட்டா அரசை இக்காரணத்துக்காக இஸ்லாமிய நாடுகள் வெறுக்கின்றன என்பது வெள்ளிடைமலை.

ஆக, ஜெனிவா நெருக்கடியிலிருந்து மீளும் தனது தளராத முயற்சிக்கு ஆதரவு தேடவே – அதற்காக இஸ்லாமிய நாடுகளைத் தனக்கு சாதகமாக வளைத்துப் போடவே - இப்படி கொரோனா காவு கொண்ட முஸ்லிம்களைக் கூட நல்லடக்கம் செய்யலாம் என்ற ஏற்பாட்டை மீளுருக் கொடுத்து கொண்டு வருகின்றது கோட்டா அரசு.

ஆக, சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை என்பது மட்டும் நிஜம்.

★ ★ ★

ஜெனிவாச் சமர் ஒருபுறம் என்றால் மறுபுறம் நமது தமிழ்த் தேசியக் கட்சிகளின் சமர் இன்றும் நாளையும் வவுனியாவை அண்டி அரங்கேறப்போகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை காலையில் வவுனியாவில் சமயப்பெரியார்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கின்றனர்.

நல்லை ஆதீனம், தென்கயிலை ஆதீனம், ஆறு திருமுருகன், வேலன் சுவாமிகள், கத்தோலிக்க மறைமாவட்டங்களின் நான்கு ஆயர்கள், தென்னிந்தியச் திருச்சபையின் ஆயர் எனச் சுவாமிகள் குழு ஒன்று இந்தப் பேச்சுகளில் இன்று ஈடுபடவுள்ளது.

வவுனியா இறம்பைக்குளத்தில் நடைபெறும் இந்தச் சந்திப்பில் அனேகமாகக் கூட்டமைப்பின் முக்கிய பிரதிநிதிகள் பலரும் கலந்து கொள்வர் என்று தெரிகின்றது.

சம்பந்தன் பங்குபற்றார். எனினும் சுமந்திரன், மாவை சேனாதிராசா, சிறீதரன், சாள்ஸ் நிமலநாதன் பங்குபற்றுவர் எனத் தெரிகின்றது.

எனினும் இந்தச் சந்திப்பில் கஜேந்திரகுமார் அணியினரோ, நீதியரசர் விக்னேஸ்வரன் தமது கட்சி சார்பில் தாமே நேரடியாகவோ கலந்து கொள்ள மாட்டார்கள் என்றும் கூறப்பட்டது.

இன்றைய சந்திப்பைத் தொடர்ந்து நாளை இலங்கைத் தமிழரசின் மத்திய குழு வவுனியாவில் கூடுகின்றது. நான் ஏற்கனவே பெருங்களேபரம் ஏற்படலாம் எனச் சுட்டியிருந்தேன். அதற்கு அதிக வாய்ப்புண்டு.

அந்தக் கூட்டத்திலும் சம்பந்தன் பங்குபற்ற மாட்டார் எனத் தெரிகின்றது. 88 வயதான அவர் தமக்கு கொரோனா வைரஸ் தொற்றுத் தடுப்பூசி செலுத்தலாமா என்பது குறித்து மருத்துவ வட்டாரங்களுடன், ஆய்வு செய்து முடிவைத் தீர்மானிக்கும் 'பிஸி'யில் ஓடித் திரிகின்றார் எனக் கூறப்பட்டது.

நல்லது நடக்க வாழ்த்துக்கள்.

இதற்கிடையில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் நாளைய கூட்டத்துக்காக பதில் பொதுச் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னறிவித்தல் நோட்டீஸ் குறித்தும் சர்ச்சை கிளப்பப்படுகின்றது.

அந்த நிகழ்ச்சி நிரலில் –

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சில பிரமுகர்கள் தம்மிஷ்டப்படி கட்சியின் பெயரை வைத்துக் கொண்டு சில, பல தரப்புகளுடன் கூட்டமைக்கும் தீர்மானத்தை எடுத்து, அறிவித்தமை தொடர்பில் மட்டக்களப்பைப் சேர்ந்த – கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் - செல்வராசா கொடுத்த ஆட்சேபக் கடித விடயம் நிகழ்ச்சி நிரலில் பதியப்பட்டுள்ளது.

அதேசமயம் –

தமிழ்த்தேசியத்தை வலியுறுத்தும் மற்றைய கட்சிகளுடன் சேர்ந்து, ஒன்றித்து 'தமிழ் தேசியப் பேரவை' என்ற பெயரில் இயங்குவதற்கான விடயத்தைப் பரிசீலிக்கக் கோரி வடக்கு மாகாண சபை அவைத் தலைவரும் கட்சியின் மற்றொரு சிரேஷ்ட உப தலைவருமான சி.வீ.கே. சிவஞானம் சமர்ப்பித்த கடிதம் நாளைய மத்திய குழுக் கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுக்கப்பட மாட்டாது எனத் தெரிகின்றது. அந்த விடயம் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படவில்லை.

பிரேரணைகளில் ஒன்றை அங்கீகரித்து நிகழ்ச்சி நிரலில் சேர்த்தமையும், மற்றையதை நிராகரித்தமையும் நாளைய மத்திய குழுக் கூட்டத்தில் களேபரங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பார்ப்போம் என்ன நடக்கும் என்பதை!

– மின்னல் –

## தான் நியமித்த ஆணைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழுவின் விசாரணை அறிக்கையை அக்குழு நிராகரித்தது.

இந்தத் தொடர் தாக்குதலைத் தடுக்கும் நடவடிக்கையை எடுக்கத் தவறியமைக்காக மைத்திரிபால சிறிசேனாவுக்கு எதிராகவும் குற்ற விசாரணை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஆணைக்குழு தனது பரிந்துரையில் தெரிவித்திருக்கின்றமை தெரிந்ததே.

இந்த ஜனாதிபதி ஆணைகுழுவை மைத்திரிபால சிறிசேனவே தாம் ஜனாதிபதியாக இருந்தபோது நியமித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவில் உயிரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உரிமைகள் கவுன்ஸில் கூட்டத் தொடரில் ஆதரவு கோரி இஸ்லாமிய நாடுகளுடன் இலங்கை அரசு பேச்சுக்களை முன்னெடுத்துவருகின்ற சூழலில் இந்த அறிவிப்பு வெளியாகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தெல்லிப்பளை வைத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலை ஒன்றில் மருத்துவம் பார்த்தார் என அந்த நோயாளி தெரிவித்திருக்கின்றார்.

சம்பவத்தை அடுத்து தனியார் வைத்தியசாலையில் அந்த நோயாளிக்கு மருத்துவம் பார்த்த தெல்லிப்பளை வைத்தியசாலை வைத்தியர் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றார்.

நேற்று அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட நபர் ஒருவருக்கும் நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நபர் மத போதனையில் ஈடுபவர் என்றும், நானாட்டான், மிருசுவில், பருத்தித்துறையில் தொற்றுக்குள்ளானவர்களுடன் நெருங்கிய தொடர்பிலிருந்தவர் என்றும் கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

## கச்சதீவு உற்வசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துறை துறைமுகத்தில் இருந்துகச்சதீவை நோக்கிப் பயணித்துள்ளது.

கச்சதீவுபுனித்அந்தோணியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் மார்ச் மாதம் மூன்றாம் வாரத்தில் இடம்பெறவுள்ளது. எனினும் கொவிட் – 19 தொற்றின் காரணமாக இந்த ஆண்டிற்கான உற்சவத்திற்கு இலங்கை - இந்திய பக்தர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பங்குத் தந்தையர் பூசை வழிபாட்டில் ஈடுபடவுள்ளனர்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெறும் பூசைக்கு தேவையான பிற ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயும் நோக்கில் படகு ஒன்று நேற்றுக் காலையில் கச்சதீவை நோக்கிப் பயணித்துள்ளது.

கச்சதீவு உற்சவத்தில் இம்முறை பக்தர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என மாவட்டச் செயலகத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அறிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## தேசிய வெசாக் நிகழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிவிக்கும் நிலையில் இலங்கையில் இந்த ஆண்டு வெசாக்கை தேசிய ரீதியில் நயினாதீவை முதன்மைப்படுத்தி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

புத்தசாசன அமைச்சின் திட்டமிடலுக்கு அமைய அதற்கான ஆயத்தக் கூட்டம் நேற்று மாலை 5.30 மணிக்கு அலரி மாலிகையில் பிரதமர் மஹிந்த ராயபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட். முக்கிய தீர்மானங்கள் வருமாறு: –

★ வடக்கில் 65 விகாரைகள் உள்ளன. அவற்றில் இடம்பெறும் நிகழ்வுகளிற்கு – நயினாதீவு செலவு தவிர்ந்து மூன்றரைக் கோடி ரூபா ஒதுக்கப்படும்.

★ அதேநேரம் மேலதிக ஏற்பாடுகள் தொடர்பில் அடுத்த கூட்டம் வரும் 3 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும்.

★ இதேநேரம் நயினாதீவு விகாரையில் உடன் மேற்கொள்ள வேண்டிய அமைப்புப் பணிகளிற்கு பத்து லட்சம் ரூபா ஒதுக்குவது.

★ வெசாக் பண்டிகையை முன்னிட்டு மே 23 ஆம் திகதி முதல் மே29 வரை வெசாக் வாரமாக அனுஷ்டிப்பது.

★ நயினாதீவு நிகழ்விற்கு கொரோனாவை கருத்தில் கொண்டு இரண்டாயிரம் பேர் வரையில் மட்டும் பங்கேற்பது .

★ நயினாதீவில் நிகழ்வு இடம்பெறும் அதேநேரம் முல்லைத்தீவு குறுந்தூர் விகாரையிலும் நிகழ்வுகள் இடம்பெறும்.

★ இதேநேரம் கிரீமலை நகுலேஸ்வரம் ஆலயத்திலும் விசேட பூசை இடம்பெறும்.

★ இதேநேரம் பூசைகளிற்கு அப்பால் பௌத்த மதம் தொடர்பில் தமிழ் மக்களிற்கு தெரியப்படுத்த வேண்டும். இது தொடர்பில் பாடசாலைகளில் விளக்கப்படுத்த வேண்டும்.

★ அறநெறிப் பாடசாலைகளுக்கும் இக் காலத்தில் தானம் வழங்குவது.

இக் கலந்துரையாடலில் பௌத்த , இந்து சமய விவகார திணைக்கள அதிகாரிகள், செயலாளர், பிரதமர் அலுவலக அதிகாரிகள், மாவட்டச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## சு.கவின் தலைவராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மசேனவை மீண்டும் நியமிக்க அக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கட்சியின் செயற்குழு கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோல், கட்சியின பொதுச் செயலாளராக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவை மீளவும் நியமிக்கம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட உப தலைவர்கள் பதவிக்கு நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## வெளியானது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடக்கம் செய்யவும் அனுமதிக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கொவிட்–19 நோயினால் உயிரிழந்தவர்களின் சரீரங்களை அடக்கம் செய்வதை ஆராய நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப நிபுணர் குழு இதற்கு அனுமதி அளித்துள்ளது.

இந்நிலையில், தற்போது அதற்கான வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் நேற்றிரவு வெளியிட்டிருக்கிறது.

## ஜெனிவாப் பிரேரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

47 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் வாக்களிக்கும் நாடுகளில் அரைவாசிக்கு மேற்பட்ட வாக்குகள் பிரேரணைக்கு ஆதரவாக அளிக்கப்பட்டால் மாத்திரமே அது தீர்மானமாகும்.

பிரிட்டன், ஜேர்மன், கனடா, மொன்றிநீக்காரோ, வடக்கு மஸிடோனியா ஆகிய நாடுகளின் அனுசரணையுடன் இந்த பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை நிலைமை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்த அவதானிப்பு அறிக்கை மீது நாடுகள் கருத்துத் தெரிவிக்கும் ஊடாட்ட அரங்கு நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்றன.

நாற்பது நாடுகள் வரை கருத்துத் தெரிவித்தன.

உறுப்பு நாடுகளில் 18 இற்கும் குறையாத தரப்புகள், பிரேரணைக்கு எதிராக வாக்களித்து, இலங்கையை ஆதரிக்கும் என கொழும்பு தெரிவித்த நிலையில் –

நேற்று பெலாரஸ், மாலைதீவு, வியட்நாம், சிரியா, கம்போடியா, நேபாளம், எகிப்து, கமரூன், சீனா, ரஷ்யா, பிலிப்பீன்ஸ் உட்பட ஒரு டசின் நாடுகள் இலங்கையை ஆதரித்து உரையாற்றின.

அதேசமயம் பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, கனடா, ஜேர்மன் உட்பட ஒரு டசின் நாடுகள் பிரேரணையை ஆதரிக்கும் நிலைப்பாட்டைப் பிரதிபலித்தன.

இந்தியா உட்பட பல நாடுகள் மதில் மேல் பூனை போன்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தின.

அதனால் பிரேரணை வெற்றி பெறுமா என்பது தொடர்பான எதிர்வு கூறலை வெளிப்படுத்த முடியாத இக்கட்டு ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் தொடர்பாக இலங்கையின் தற்போதைய அரசு கையாண்டு வரும் இனவெறிப்போக்கினால் அதிருப்தியுற்றுள்ள இஸ்லாமிய நாடுகள், இந்தப் பிரேரணையை ஆதரித்து வாக்களிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

கொரோனாவால் சாகும் இஸ் லாமியர்களின் ஜனாஸாக்களை புதைக்கக் கூடாது, எரிக்க வேண்டும் என்ற - இஸ்லாமிய மார்க்கங்களுக்கு முரணான - கடும் நிலைப்பாட்டை கொழும்பு அரசு எடுத்திருந்ததால், அதன் இனவெறிப் போக்கைக் கண்டிப்பதற்காக மேற்படி பிரேரணையை ஆதரிக்கலாம் என இஸ்லாமிய நாடுகள் முடிவு செய்திருந்தன.

ஆனால், அந்த ஜனாஸாக்களைப் புதைக்கலாம், அதற்கு அனுமதியுண்டு என்று தெரிவிக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலை நேற்றிரவு அரசு வெளியிட்டுள்ளமையால் இஸ்லாமிய நாடுகளின் மனநிலை இலங்கைக்கு ஆதரவாக மாறக் கூடும் எனக் சுட்டப்படுகின்றது.

இதனால், பிரேரணையின் வெற்றி வாய்ப்பு ஊசலாடுவதாகக் கூறப்படுகின்றது.

அடுத்த மாதம் 23ஆம் அல்லது 24ஆம் திகதி இந்தப் பிரேரணை மீதான இறுதி வாக்கெடுப்பு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## காணாமல் போனோரது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரச்சினைகளை தெரிந்து கொள்ள ஜனாதிபதி விரும்புகிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

காணாமல் போனோரது உறவினர்களை ஜனாதிபதி சந்திக்கின்ற முதலாவது சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை குறித்த பிரேரணைக்கு எதிராக கொழும்பில் போராட்டம்!





பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளின் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பில் அமைந்துள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்துக்கு முன்பாக மக்கள் பொறுப்பு மையத்தின் உறுப்பினர்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் இடம்பெற்று வருகிறது.

இம்முறை இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் அறிக்கையொன்று கடந்த புதன்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த அறிக்கையை முற்றாக நிராகரிப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து குறித்த அறிக்கை தொடர்பாக விவாதம் இடம்பெறவுள்ளதுடன், இன்றைய அமர்வில், பிரித்தானியா தலைமையிலான கூட்டு நாடுகளால் இலங்கைக்கு எதிரான பிரேரணையொன்று முன்வைக்கப்படவுள்ளது.

கனடா, ஜேர்மனி, வடமசெடொனியா, மலாவி, மொன்டினீக்ரோ, பிரித்தானியா ஆகிய நாடுகள் இணைந்து இந்த பிரேரணையை முன்வைக்கவுள்ளன.

இதில் போர்க் குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களை திரட்டுதல், ஆய்வு செய்தல், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தி எதிர்கால விசாரணைக்கான முதற்கட்ட நடவடிக்கையாக அவற்றை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கவுள்ள பிரேரணையை தயார் செய்வதற்காக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை தொடர்பிலான கூட்டு நாடுகள், மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு இன்று முதல் கொரோனா தடுப்பூசி!

நாட்டின் பல பகுதிகளில் இன்று (வெள்ளிக்கிழமை) முதல் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதன்படி தெஹிவளையில் உள்ள மக்களுக்கு தெஹிவளை எம்.எம்.சி. வளாகத்தில் இன்று முதல் தடுப்பூசி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெஹிவளை நகராட்சி மன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

மேலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நிறைவுற்றதன் பின்னர், 30 – 60 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதன்படி, 26ஆம் திகதி நெதிமாலையில் வசிக்கும் மக்களுக்கும் 27ஆம் திகதி சர்னங்கர வீதி, 28ஆம் திகதி கொஹுவலையில் வசிப்போருக்கும் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது.

அதேநேரம், மார்ச் 2 ஆம் திகதி பார்க் வீதி, 3 ஆம் திகதி தெஹிவளை கிழக்கு, 5 ஆம் திகதி கொஹுவலை கிழக்குப் பகுதியில் வசிப்போருக்கும் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது.

இதேவேளை, கொவிட்19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் கொழும்பு மாவட்ட மக்களை கொவிஷீல்ட் தடுப்பூசி பெற பின்வரும் அதிகாரிகளில் ஒருவரை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

அதன்படி அவர்கள் வைத்தியர் தம்மிக ஜெயலத் 011 2437154, 071 4397939 மற்றும் சுகாதார தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் ஆர்.எல்.டி.எஸ்.விஜயமுனி 0112691922 ஆகியோரை தொடர்புகொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனாவிலிருந்து 447 பேர் குணமடைவு!

நாட்டில் மேலும் 447 பேர் கொரோனா வைரஸ் தொற்றுப் பாதிப்பிலிருந்து குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கொரோனாத் தொற்றிலிருந்து மீண்டோரின் மொத்த எண்ணிக்கை 76 ஆயிரத்து 961 ஆகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை, இலங்கையில் இதுவரை 81 ஆயிரத்து 467 பேருக்குக் கொரோனாத் தொற்றுகண்டறியப்பட்டுள்ளதுடன் அவர்களில், இன்னும் நான்காயிரத்து 49 பேர் தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அத்துடன், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 457 ஆகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விதிமுறைகளுக்கு அமையப் பொதுமக்கள் தொடர்ந்தும் செயற்படவேண்டும் - ரோஹண

வார இறுதி நாள்களில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளுக்கு அமைய பொதுமக்கள் தொடர்ந்தும் செயற்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். நேற்று (வியாழக்கிழமை) காலையுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில், தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் தற்போது வரையான காலப் பகுதியில், 3 ஆயிரத்து 233 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மோட்டார் சைக்கிள், தங்கசங்கிலி மீகொடவில் திருடிய நபர் சிக்கினார்!

மீகொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளை கொள்ளையிட்ட சந்தேக நபரொருவர் குறித்த மோட்டார் சைக்கிளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

மஹரகம பொலிஸாரால் 44 வயதுடைய சந்தேக நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர் பன்னிப்பிட்டிய மற்றும் பத்தரமுல்ல பிரதேசங்களில் வசிப்பவராவார். மீகொட பொலிஸ் பிரிவில் கொள்ளையடிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளுடன் தொடர்பாக சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளில் பொரல்லஸ்கமுவ, பிலியந்தல, பமுனுகம, அத்துருகிரிய மற்றும் மஹரகம ஆகிய பகுதிகளில் தங்க சங்கிலிகள் கொள்ளையிடப்பட்ட 10 சம்பவங்கள் தொடர்பில் தெரியவந்துள்ளது. இதன் போது கொள்ளையடிக்கப்பட்ட தங்க ஆபரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அண்மைக் காலமாக வீதிகளில் சென்று கொண்டிருப்பவர்களின் தங்க சங்கிலிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவை கொள்ளையடிக்கப்படுகின்றமை அதிகரித்து வருகிறது. போதைப்பொருள் பாவனையாளர்களாலேயே இவ்வாறான கொள்ளை சம்பவங்கள் அதிகளவில் முன்னெடுக்கப்படுகின்றன. கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபரும் போதைப்பொருள் பாவனையாளராவார். மஹரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எவ்வாறிருப்பினும் மோட்டார் சைக்கிள்களை தரித்து நிறுத்தும் போது மிகவும் பாதுகாப்பாக இடங்களில் நிறுத்துமாறும், தங்க ஆபரணங்கள் அணிந்து செல்லும் பெண்கள் இரவு வேளைகளில் தனி பாதைகளில் செல்வதைத் தவிர்த்து சன நடமாட்டமுள்ள பாதைகளில் செல்லுமாறு கேட்டுக் கொள்கின்றோம். – என்றார்.

# தவக்காலச் சிந்தனை



அன்ரனி பீற்றர் அபீர்ராஜன்
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்

## எங்கள் செயல்களே எம்மைத் தீர்ப்பிடும்

'மறைநூல் அறிஞர் பரிசேயர் ஆகியோரின் நெறிகளை விட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும். இல்லையேல் நீங்கள் விண்ணரசுக்குள் புக முடியாது. (மத்.5:20) இயேசுவின் வார்த்தைகள் இவைகள் கொலை செய்வதை விட சகோதரனிடம் சினம் கொள்பவன் முட்டாளே, அறிவிலியே என்பவன் எரிநரகிற்கு ஆளாவான். சகோதரரிடம் மனத் தாங்கள் இருந்தால் அவர்களுடன் ஒப்புரவாகி அவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திய பின்பே நீ உனது காணிக்கையைச் செலுத்து அன்று இயேசு கூறுவது எம்மைச் சிந்திக்க அழைக்கின்றது.

எமது வாழ்வின் வார்த்தைகள், செயல்கள் பிறரைத் துன்புறுத்துவதாக அமையக் கூடாது அவ்வாறு அமையுமாக இருந்தால் எமது செயல்களே எமக்குத் தண்டனையை வருவிக்கும். எமது வாழ்க்கை நெறி சிறந்ததாக இருக்க வேண்டும் என்பதை இறைவார்த்தை எமக்கு இடித்துரைக்கின்றது. கேட்பதும் விடுவதும் கைக் கொள்வதும் தவிர்ப்பதும் எம்மை நாமே தீர்ப்பிடும் செயல்களாகும் என்பதை விழிப்போடு ஏற்க வேண்டியதொன்றாகும். மனிதர்கள் யாவருக்கும் கூறப்படும் வார்த்தைகள் எம் மூலமாக பிறரையும் சென்றடைய வேண்டியது எமக்கு கடமையானதாகும். உங்கள் நற்செயல்களை மக்கள் கண்டு, நீங்கள் என் சீடர்கள் என்று கூறும்படி வாழவேண்டும் என்று இயேசு கூறுவதை எம் வாழ்வில் கடைப்பிடிக்க ஒவ்வொருவரும் முன் வரவேண்டும்.

தெரிந்து செய்வதே பாவம். தெரியாமல் செய்வது குற்றமாகும். குற்றங்களை திருத்தி, பாவ மன்னிப்பு வேண்டும் பொழுது இறைவன் நிச்சயம் எங்களை மன்னிப்பார். வருந்தாத உள்ளங்கள் திருந்தியதில்லை. திருந்தாத உள்ளங்கள் மகிழ்வோடு வாழ்வதுமில்லை. இறைசாயலான சகோதரர்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டு வாழ்வதே இறைவன் விரும்பும் வாழ்வாகும். பழிவாங்கும் மனப்பாங்குடன் கடின மனம் படைத்தவர்களாக, மற்றவர்களின் சொத்துக்களை அபகரிக்கின்றவர்கள் அல்லது அடுத்தவர்களின் சொத்துக்களை நாசம் செய்கின்றவர்களாக ஒருவரோ ஓரினமோ செயற்படுமாக இருந்தால் இறை தண்டனைக்கு தப்ப முடியாது. எம்முடைய தீய நெறிகளை மதிப்பீடுகளை, தீய செயல்களை விட்டொழித்து நன்மை செய்து அன்பு செலுத்தி, நற்செய்தி மதிப்பீடுகளை நமதாக்கிக் கொள்வோம் இறையருள் எம்மை வழிப்படுத்தும்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்தியாவின் எச்சரிக்கை

காட்டமான விடயங்களையும் – நளினமான, மென்மையான சொல்லாடலில் – கைலாகு கொடுத்து சிரித்துக் கொண்டே கூறுவதுதான் இராஜதந்திரமொழி.

இராஜதந்திர ஊடாட்டங்களில் – இராஜதந்திரிகளின் பேச்சுக்களில் – கோபமான, கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் இருக்கா; உடல்மொழி கருத்துச் சீற்றத்தைக் காட்டாது. ஆனால் மென்மையான வார்த்தைகளில் ஆழமான கோபம் தோன்றாமல் தோற்றும்.

சுருக்கமாச் சொல்வதானால், மற்ற நாடு மீது போர்ப்பிரகடனம் செய்யும் முடிவைக் கூட அந்த நாட்டு இராஜதந்திரியிடம், இந்த நாட்டு இராஜதந்திரி புன்முறுவல் பூத்தபடி, கைலாகு கொடுத்து, குசலம் விசாரித்து கொண்டு கூறுவதுதான் இராஜதந்திர அணிகலன்.

அப்படி ஒரு வேலையை இலங்கை விடயத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றது இந்தியா. வெளிப்பார்வைக்குத் தோற்றாவிட்டாலும் சத்தம் சந்தடியின்றி அப்படி ஒரு வேலையைச் செய்திருக்கின்றது இந்தியா.

இந்திரா காலத்தில், ஜே.ஆர். ஆட்சிப் பீடம் மீது புதுடில்லி தொடுத்த இராஜதந்திரப் போரை ஒத்தது இப்போது மோடி அரசு பண்ணியிருக்கின்ற காரியம்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராக மேற்கு நாடுகள் முன்வைத்துள்ள பிரேரணையை ஆதரித்தும் எதிர்த்தும் நேற்று பல நாடுகளும் கருத்து வெளியிட்டன. பல தரப்புகளினதும் கருத்து வெளிப்பாட்டை நோக்கும் போது அவை ஒவ்வொன்றும் இந்தப் பிரேரணையை ஆதரிக்கப் போகின்றனவா அல்லது எதிர்க்கப் போகின்றனவா என்பதை எடைபோடக் கூடியதாக இருந்தது.

ஆனால், வழமைபோல நேற்று இந்தியத் தரப்பு வெளியிட்ட ஒன்றரை நிமிட கருத்துரையை நோக்கினால், அது பிரேரணையை ஆதரிக்கின்றதா அல்லது எதிர்க்கின்றதா என்ற மயக்க நிலையே அதில் தொக்கி நின்றது. வழமைபோல இந்தியா இந்தப் பக்கமும் இல்லாமல், அந்தப் பக்கமும் இல்லாமல் மதில்மேல் பூனை நிலைப்பாட்டையே பேணுகின்றது என்ற அவதானிப்பையே அந்தக் கருத்துரை பிரதிபலித்து நின்றது.

அதனால், பிரேரணையை சமர்ப்பித்த நாடுகளுக்கும் அதை ஆதரித்தும், எதிர்த்தும் நிற்கின்ற தரப்புகளுக்கும் தெளிவான – திட்டவட்டமான – உறுதியான – ஒரு நிலைப்பாட்டையோ, செய்தியையோ, இந்தியா வெளிப்படுத்தவில்லை என்ற குறை நீடிக்கவே செய்கின்றது.

ஆனால், பிணக்கில் சம்பந்தப்பட்ட இலங்கைக்கு காட்டமான – காத்திரமான – ஆழமான – முன்னெச்சரிக்கை ஒன்றை அது மிகத் தெளிவாகவும், வெளிப்படையாகவும், உறுதியாகவும், சந்தேகத்துக்கு அப்பாலும், ஐயந்திரிபறவும் இந்தியா தெரிவித்திருக்கின்றது என்பதுதான் முக்கியமானது.

இலங்கைக்குப் பேரதிர்ச்சியைத் தரும் அந்த இராஜதந்திரச் செய்தி, வழமையான இராஜதந்திர முறைமைகளுக்கு அமைவாக, மென்மையான இராஜதந்திர சொல்லாடல்களில் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை தொடர்பான இந்தியாவின் ஊடாட்டம் இரண்டு தூண்களில்தான் தங்கியிருக்கின்றது என்கிறது பாரதம்.

ஒன்று – இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்கும் இறைமைக்குமான இந்தியாவின் ஆதரவு.

மற்றையது – சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கௌரவத்துடன் வாழ்வதற்கான தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் அர்ப்பணிப்பு.

– இவ்வாறு வலியுறுத்திய இந்தியப் பிரதிநிதி *“இவை ஒன்று அல்லது மாற்றுத் தெரிவுகள் அல்ல, ஒன்றில் மற்றொன்று தங்கியிருப்பது”* – என்ற சாரப்படவும் கருத்துரைத்திருக்கின்றார்.

இதுவே, இலங்கைக்கு விடப்பட்ட இராஜதந்திர எச்சரிக்கை.

இரண்டு தூண்களில் தாங்கி நிற்கும் இந்திய – இலங்கை உறவில் ஒரு தூண் தகர்ந்தால் மற்றதில் உறவு தொங்கிக் கொண்டு நிற்காது வீழ்ந்து விடும்.

அது மாத்திரமல்ல, இவை இரண்டும் மாற்றுத் தெரிவுகள் அல்ல, ஒன்றில் மற்றொன்று தங்கி நிற்பது என்ற இராஜதந்திர சொல்லாடல் மூலம் இந்தியா இலங்கைக்கு கூற வருவது என்ன?

ஒன்று இல்லாவிட்டால் மற்றையதும் இல்லை என்பதுதான் அதன் முழு அர்த்தம்.

தமிழர்களின் நீதி, நேர்மையான அபிலாஷைகள் – அதாவது 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் அதிகாரப் பகிர்வு உட்பட்ட விடயங்கள் – செம்மைப்படுத்தப்பட்டால்தான் –

இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்கும் தனித்துவ இறைமைக்குமான இந்தியாவின் ஆதரவு நீடிக்கும் என்பதே அதன் பொருள்.

தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கொழும்பு தவறினால் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் இறைமைக்கு இந்தியாவின் ஆதரவு கேள்விக்குள்ளாகும் என்பதே விளக்கம்.

ஜெயவர்த்தனா காலத்தில் தமிழர்களின் போராளிகள் இயக்கங்களுக்கு இந்திராகாந்தி அரசு மறைமுகமாக முகாம்களை அமைத்து, பயற்சி கொடுத்து, இலங்கை அரசின் ஆள்புல ஒருமைப்பாட்டையும் இறைமையையும் கேள்விக்குள்ளாக்கிய அனுபவம் – பட்டறிவு – கொழும்புக்குத் தாராளமாக உண்டு.

ஆகவே, புதுடில்லியின் ஜெனிவாச் செய்திக்குள் புதைந்து கிடக்கும் ஆழமான எச்சரிக்கை கொழும்பின் மூளைமையத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் என்பது நிச்சயம்.

# வினை விதைத்தவன் வினை அறுக்கும் ‘கவுண்டவுன்’ படலம் ஆரம்பமாகியுள்ளது!

## மனோகணேசன் தெரிவிப்பு



‘வினை விதைத்தோர், வினை அறுக்கும்’ கவுண்டவுன் படலம் ஆரம்பமாகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அவரது முகப்புத்தகத்திலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் தனது முகப்புத்தகத்தில் -

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதி சஹ்ரான் இந்நாட்டு முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை.

ஆனால், சஹ்ரான் கும்பலின் இன, மத அடையாளத்தை பயன்படுத்தி, முஸ்லிம் எதிர்ப்பு பேரினவாதத்தை தூண்டிவிட்டுதான், நல்லாட்சியை தோற்கடித்து, இந்த கள்ளாட்சி, பதவிக்கு வந்தது. ஆகவே சஹ்ரான் குண்டு வெடிப்பு, இந்த கள்ளாட்சிக்கு, பாரிய உதவியாக அமைந்துள்ளது.

இன்று, குண்டு வெடிப்பை தடுக்கத் தவறியோர் பட்டியலை, ஆணைக்குழு அறிக்கை தந்துள்ளது. அதில் முதலிடம் மைத்திரிபால சிறிசேனவுக்கு அவர் என்ற முன்னாள் ஜனாதிபதி மட்டுமல்லர், இந்நாள் ஆளுங்கூட்டணி தவிசாளர் மற்றும் மொட்டு கட்சியின் பொலன்னறுவை மாவட்ட எம்.பியும், சபையில் ஆளும் தரப்பின் முதல் வரிசையில் அமர்ந்துள்ள முதல் எம்.பி.

குண்டு வெடிப்புக்கு சில மாதங்கள் முன்னர் அவர் நல்லாட்சியை தடாலடியாகக் கலைத்து, மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து, ஓர் ‘அரசாங்கத்தை’ 2018ஆம் வருடம் நியமிக்க முயன்றார் என்பதையும் மறக்க முடியாது.

ஆகவே, ‘பேரினவாத பூமராங்’ வளையம், அதை எறிந்த பேரினவாத மொட்டுக்காரர்களை நோக்கியே, இப்போது திரும்பி வருகிறது.

உயிர்த்த ஞாயிறு உதிர்த்த அப்பாவி உயிர்கள், எனது கொழும்பு கொச்சிக்கடையிலும், மட்டக்களப்பிலும் உயிரிழந்த தமிழ் கத்தோலிக்க உயிர்களின் ஆன்மாக்கள் சாந்தியடைய வேண்டி,‘வினை விதைத்தோர், வினை அறுக்கும்’ கவுண்டவுன் படலம் ஆரம்பமாகிறது..!’ – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தபால் கட்டணத்தில் திருத்தம்!

தபால் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பான யோசனையை அடுத்த மாதம் முன்வைக்க தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தபால் திணைக்களத்தின் நட்டத்தைக் குறைக்கும் வகையிலும் புதிய முறைமையை வகுக்கும் வகையிலும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சாதாரண தபால் முத்திரை கட்டணம் 15 ரூபாவாகக் காணப்படுகின்றது. எனினும் அதற்காக திணைக்களம் 22 ரூபா 75 சதத்தை செலவு செய்வதாகவும், துரித தபால் சேவைக்காக 50 ரூபா அறவிடும் நிலையில் தனியார் பிரிவுகள் அதற்காக 250 ரூபாவை அறவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கண்டி எசல பெரஹெராவில் தாக்குதல் நடத்துவதே சஹ்ரானின் முதல் இலக்கு!

## ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிப்பு

கண்டி எசல பெரஹெராவில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொள்வதே ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாஷிமின் பிரதான திட்டமாக இருந்ததாக ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர், மிகப் பெரிய அளவிலான வெடிபொருள் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி புத்தளம் - வண்ணாத்தவில்லு பகுதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் 2019 ஏப்ரல் 4 ஆம் திகதி சஹ்ரான் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் பெயர்கள் உள்ளிட்ட தாக்குதல் பற்றிய தகவல்களை இந்திய அதிகாரிகள் புலனாய்வு சேவைகளுக்கு வழங்கியிருந்தாலும் பாதுகாப்பு செயலாளர், தேசிய புலனாய்வுத் தலைவர், பொலிஸ்மா அதிபர், புலனாய்வு பணிப்பாளரும் தங்கள் கடமைகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

எனினும் இந்தத் தாக்குதலைத் தடுக்க சட்ட அமுலாக்க அதிகாரிகள் தவறிவிட்டனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், ஏப்ரல் 20 ஆம் திகதி சஹ்ரான் மற்றும் ஏழு தற்கொலை குண்டுதாரிகள் ஈஸ்டர் தாக்குதலை நியாயப்படுத்தும் உறுதிமொழியை எடுத்துள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மாவனெல்லயில் புத்தர் சிலைகளை இடித்த சம்பவத்தின் முக்கிய சந்தேக நபர்களான ஷாஹீத் மற்றும் சாதிக் ஆகியோர், க.பொ.த. சாதாரண தர தேர்வுக்கு தோற்றவிருந்த 30 மாணவர்களுக்கு பயிற்சி முகாம் ஒன்றை நடத்தியதாக ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கை மீதான விவாதத்துக்குத் தயார் - தினேஷ்

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான இறுதி விசாரணை அறிக்கை மீதான விவாதத்தை நடத்த ஆளும் தரப்பு தயாராகவுள்ளதாக சபை முதல்வர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விவாதம் நடத்துவதில் எவ்வித சிக்கலும் இல்லை எனவும் முன்னர் குறிப்பிட்டப்படி விவாதம் நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.



சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தனவால் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழி மூல பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டன.

# கேள்விகள் சமர்ப்பித்து இருமாதம் ஆனால் இதுவரை பதில் இல்லை!

எனது கேள்விகளைச் சமர்ப்பித்து இரண்டு மாதங்களாகின்றன. இன்னும் பதில் கிடைக்கவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கேள்விபதிலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட இரா.சாணக்கியன் –

சபாநாயகர் அவர்களே நான் நாடாளுமன்றத்துக்கு வருகை தருகின்றமை மட்டக்களப்பிலிருந்து. இதற்கான தூரம் 350 கிலோமீற்றர் ஆக உள்ளது. நான் எனது கேள்விகளைச் சமர்ப்பித்து இரண்டு மாதங்களாகின்றன. இன்னும் எனக்குப் பதில் கிடைக்கவில்லை.

நான் உங்களிடம் கேள்வி எழுப்பியமை செப்ரெம்பர் மாத காலப்பகுதியில் அதற்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை. இவ்வாறான நிலைமை இருக்குமாயின் எங்களுக்கு உடன் தெரிவித்ததால் நாங்கள் மட்டக்களப்பிலிருந்து நாடாளுமன்றத்துக்கு வர வேண்டிய தேவை இருக்காது.

எங்களுக்கு பேசுவதற்கு பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்த விடயம் சுகாதாரத்துறை சம்பந்தமானது. முக்கியமாக கொவிட் 19 சம்பந்தமான விடயங்கள். செப்ரெம்பர் மாதம் சுகாதாரத்துறை அமைச்சரிடம் நான் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்க 3 வாரங்கள் கேட்டிருந்தார்.

இன்னும் அதற்கு பதிலளிக்கவில்லை. எங்களது கேள்விகளுக்கு பதிலளிக்காமல் எமது உரிமைகள் உதாசீனம் செய்யப்படுவதாலேயே நாங்கள் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டங்களை முன்னெடுக்கவேண்டியுள்ளது.

ஆனால் இந்த போராட்டங்களை முன்னெடுப்பதற்கு பொலிஸார் தடை உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றனர். இதற்கான பதிலை அரசாங்க அமைப்பாளர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவே அளிக்க வேண்டும்.

நாங்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிக்க 2 வாரங்கள் கேட்டால் நாங்கள் நாடாளுமன்றத்துக்கு வர வேண்டிய தேவை இல்லை. நீங்கள் ஏன் எங்களுக்குப் பதிலளிக்க மறுக்கின்றீர்கள்? நாங்கள் கேட்கின்றமை மட்டக்களப்பு மாவட்டத்தின் சுகாதாரம் பற்றிய முக்கியமான கேள்விகள்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அவர்களே நான் கிலோ மீற்றர் தூரத்தைக் கூறியமை இதற்காக அல்ல. நான் குறிப்பிட வந்த விடயம் என்னவென்றால் சுகாதாரத்துறை சம்பந்தமான கேள்விகளுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை என்பதால் தான். முக்கியமான கேள்விகள் நெடுங்காலமாக இன்னும் பதிலளிக்கப்படாமலேயே உள்ளன.



அதற்காகவே நான் இந்தக் கேள்விகளை வினவினேன். நான் பிரதமரிடமே அதிக கேள்விகளை வினவினேன். ஏனெனில் அவரிடம் கேள்விகளைக் கேட்க முடியுமானதாக இருக்கின்றமை வருடத்துக்கு ஒரு முறை மட்டுமே. அதனால் தான் நான் அதிக கேள்விகளை அவரிடம் எழுப்பினேன்.

நீங்கள் பல கேள்விகளுக்குப் பதிலளித்துள்ளீர்கள். அதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் இன்னும் சுகாதாரம் சம்பந்தமாக எழுப்பிய கேள்விகளுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை.

சுகாதாரம் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் இதற்கு மூன்று பேரை நியமிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். அதன் போது கருத்துத் தெரிவித்த ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எனது கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் இருந்தால் ஊடகங்களில் என்னைப் பற்றி தவறான கருத்துக்களை முன்வைப்பார்கள். ஆகையால் இவரது கேள்விகளுக்கு நான் பதிலளிக்கின்றேன்.– எனத் தெரிவித்தார்.

## சுங்கத்துறையை ஒழுங்குபடுத்தவும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தற்போதைய நிலைமைகளை ஆராய்ந்து அதன் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை செய்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார்.

சுங்கத் துறைக்கு எதிராக எழும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இடம்பெற்றுள்ளன எனக் கருதப்படும் முறைகேடுகளைத் தடுத்து வினைத்திறன் மற்றும் பயனுறுதி வாய்ந்த சேவைகளை வழங்குவதற்கான பரிந்துரைகளை வழங்கும் பொறுப்பு ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் பாதுகாப்பு மற்றும் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைக் கவனத்தில் கொண்டு, சுங்கத் திணைக்களத்தின் செயற்பாடுகளை வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை வழங்குவது ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள மற்றொரு பொறுப்பாகும்.

பொதுமக்கள் மற்றும் ஏனைய தரப்பினரின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் சுங்க தொழிற்சங்கங்கள் சமர்ப்பித்துள்ள முன்மொழிவுகளை மீளாய்வு செய்வதற்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் தலைவராக உயர் நீதிமன்ற நீதிபதி ஷிரான் என்டனி குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ, மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த, இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கே.எம்.எம். சிறிவர்தன, சிரேஷ்ட ஆலோசகர் (வர்த்தகம்) கலாநிதி சனத் ஜயனெத்தி மற்றும் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் முன்னாள் மேலதிக பணிப்பாளர் நாயகம் பி.ஏ. டயஸ் ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

## யாழ்.சிறை, வைத்தியசாலைகளில் அதிகரிக்கும் கொரோனாத் தொற்று!

### மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கவலை

வடக்கு மாகாணத்தில் மேலும் 8 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை கடந்த புதன்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர்களில் 4 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்ட 431பேரின் பி.சி.ஆர். பரிசோதனையில் 7 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மாதிரிகள் பெறப்பட்ட யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 4 கைதிகள் அடங்குகின்றனர். கடந்த செவ்வாய்க்கிழமை கைதி ஒருவர் அடையாளம் காணப்பட்ட நிலையில் மேலும் 4 பேர் கடந்த புதன்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சிற்றூழியர்.

மேலும் மல்லாவியில் புத்தளத்திலிருந்து வருகை தந்த பெண் உட்பட இருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மல்லாவியில் இடம்பெற்ற இறுதிச் சடங்கு ஒன்றுக்கு புத்தளத்திலிருந்து வருகை தந்தோர் பங்கேற்றிருந்தனர். அந்த இறுதிச் சடங்கில் பங்கேற்ற ஒருவருக்கு கடந்த சில தினங்களுக்கு முன் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. மேலும் இருவருக்கு தொற்று உள்ளமை கடந்த புதன்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புழக்கத்துக்கு வரவுள்ளது புதிய 20 ரூபா நாணயம்!




இலங்கை மத்திய வங்கியின் 70 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் வெளியிடப்பட்ட புதிய 20 ரூபா நினைவு நாணயம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஷ்மனால் கடந்த புதன்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இது இலங்கை மத்திய வங்கியின் 70 ஆவது ஆண்டுநிறைவைக் குறிக்கும் வகையில் வெளியிடப்பட்ட நினைவு நாணயம் ஆகும்.

நாணயம் 7 பக்க வடிவத்துடன் நிக்கல் பூசப்பட்ட எஃகு மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. 50 லட்சம் நாணயங்கள் எதிர்வரும் மார்ச் 03 ஆம் திகதி முதல் புழக்கத்தில் விடப்படும் என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

## சுன்னாகத்தைச் சேர்ந்த இருவர் யாழ்.பல்கலையில் சாதனை!





சுன்னாகம் வாழ்வகத்தைச் சேர்ந்த இருவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 35 ஆவது பட்டமளிப்பு விழாவின் போது சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டனர். இதன்படி 2013ஆம் ஆண்டு வாழ்வகத்தில் இணைந்துகொண்ட சபேசன் கட்சனி மற்றும் அதே ஆண்டில் வாழ்வகத்தில் இணைந்துகொண்ட விஜயகுமார் விஜயலாதன் ஆகியோரே இந்தப் பட்டத்தை புதன்கிழமை பெற்றுள்ளனர்.

சபேசன் கட்சனி அரசறிவியல் துறையிலும் விஜயகுமார் விஜயலாதன் சமூகவியல் துறையிலும் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டனர்.

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் இயங்கி வரும் விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம் கண்பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளின் கல்வி வரலாற்றில் மிகவும் காத்திரமான பணியாற்றி வரும் ஒரு தொண்டு ஸ்தாபனமென்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்வக மாணவர்கள் கல்வியில் சிறந்து உயர் பெறுபேறுகள் பெற்று சாதனை புரிந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கை – பாக் நாடாளுமன்ற நட்புறவு சங்க தலைவராக நிமல் சிறிபால டி சில்வா தெரிவு!

இலங்கை – பாகிஸ்தான் நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவு செய்யப்பட்டிருக்கின்றமையுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், ஏ.அரவிந்த குமார் மற்றும் மொஹமட் முஸம்மில் ஆகியோர் உப தலைவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இலங்கை – பாகிஸ்தான் நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற போதே நிறைவேற்றுக் குழு மற்றும் பதவிகளுக்கான புதிய உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் பாகிஸ்தான் குடியரசின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் மொஹமட் சாத் ஹகட்டாக்கும் கலந்துகொண்டிருந்தார்.

இந்தச் சங்கத்தின் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவுசெய்யப்பட்டமையுடன், உதவிச் செயலாளராக வடிவேல் சுரேஸ்ும், பொருளாளராக வீரசுமன வீரசிங்ஹவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதனைவிடவும், நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.காதர் மஸ்தான், துஷார இந்துனில் அமரசேன, வைத்தியகலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, மேஜர் சுதர்ஷன தெனிபிட்டிய, அலிசப்ரி ரஹீம், கனஹ ஹேரத், ஜகத் புஷ்பகுமார, ஜயந்த வீரசிங்ஹ, ஜகத் குமார, குலசிங்கம் திலீபன், வேலுகுமார், பைசல் ஹாசிம், அமரகீர்த்தி அதுகோரல, மதுர விதானகே, சாமர சம்பத் தஸநாயக்க, உதயன கிரிந்திகொட, குணதிலக ராஜபக்ஷ, வைத்திய கலாநிதி திலக் ராஜபக்ஷ, ஜே.சி.அலவத்துவல, ரொஷான் ரணசிங்க ஆகியோர் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

# லிட்ரோ கேஸ் மற்றும் லிட்ரோ டேர்மினல் நிறுவனங்கள் குறித்து கோப் குழு கேள்வி





கொழும்பு, செப்.26

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கும் லிட்ரோ கேஸ் லங்கா நிறுவனம் மற்றும் லிட்ரோ டேர்மினல் லங்கா நிறுவனம் ஆகியன கணக்காய்வாளர் நாயகத்தின் அறிவிப்பைப் புறக் கணித்து தனியார் நிறுவனத்தின் ஊடாக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டமை தொடர்பில் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) கவனத்தில் எடுத்துக்கொண்டது.

இந்த இரு நிறுவனங்கள் தொடர்பான கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள கணக்காய்வாளர் நாயகத்துக்கு எவ்வித தடையும் இல்லையென சட்டமா அதிபர் ஊடாக ஆலோசனை பெறப்பட்டிருந்ததுடன், இந்த நிலைப்பாடு கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் பணிப் பாளர் சபையின் தீர்மானத்தை மாத்திரம் அடிப்படை யாகக் கொண்டு மூணஆபு என்ற தனியார் நிறுவனத் தின் ஊடாக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டமை குறித்து கோப் குழு கேள்வியெழுப்பி யிருந்தது.

பேராசிரியர் சரித ஹேரத் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய கோப் குழுக் கூட்டத்தில், சீஷேல் தீவில் இயங்கிவந்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கிளை மூடப்பட்டமையால் 3.6 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டமை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கணக் காய்வு நடவடிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்தி னால் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், அதன் 99.94 வீத உரிமையைக் கொண்ட லிட்ரோ கேஸ் லங்கா லிமிடட் மற்றும் 100 வீத உரிமையைக் கொண்ட லிட்ரோ டேர்மினல் லங்கா லிமிடட் ஆகிய நிறுவனங்கள் மாத்திரம் தனியார் நிறுவனங்களினால் கணக்காய் வுகளை மேற்கொண்டமை குறித்து கோப் குழுவின் தலைவர் கவனம் செலுத்தினார்.

பணிப்பாளர் சபையின் ஊடாக எடுக்கப்பட்ட தீர்மா னத்துக்கு அமைய தனியார் துறையைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றின் ஊடாக கணக்காய்வை மேற் கொள்வதற்கு சட்டரீதியாக எவ்வித தடையும் இல்லை என இங்கு கருத்துத் தெரிவித்த லிட்ரோ காஸ் லங்கா நிறுவனத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

விசேடமாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தின் கீழ் உள்ள ஏனைய நிர்வாக நிறுவனங்களும் எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளால் பாதிக்கப்படாதிருப்பதுடன், ஏனைய அரசாங்க நிறு வனங்களிலும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாதி ருப்பதை உறுதிப்படுத்துவது அனைவரினதும் பொறுப் பாகும் என்றும் கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் வலியுறுத்தினார். இவ்விடயம் தொடர்பில் கோப் குழு, சட்டமா அதிபரிடம் காரணங்களைக் கேட் டறிந்து, அதனை பிரதான கணக்காளரின் ஊடாகத் தெரியப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தின் மாலைதீவு மற்றும் சீஷேல் தீவுகளின் கிளைகள் மூடப்பட்டமையினால் ஏற்பட்ட நஷ்டம், குறித்த கிளை களைத் திறப்பதற்கும் மூடுவதற்கும் கூட்டுத்தாபனத் திற்கு ஏற்பட்ட நஷ்டம் மற்றும் செலவு குறித்து விரை வில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் கோப் குழு, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அறிவித்தது.

இந்த கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான நாளக கொடஹேவா, சுசில் பிரேமஜயந்த, நாடாளு மன்ற உறுப்பினர்களான சம்பிக்க ரணவக்க, பிரேம் நாத் சீ.தொலவத்த, எஸ்.எம்.மரிக்கார், சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோரும், இலங்கை காப்புறு திக் கூட்டுத்தாபனம், லிட்ரோ காஸ் நிறுவனத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# முதல் தடுப்பூசி பெற்றாலும் எச்சரிக்கையாக இருங்கள்

## எச்சரிக்கின்றார் இராணுவத் தளபதி

கொரோனா வைரஸ் தடுப்பூசியின் முதல் அளவைப் பெற்ற பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும், அதிக தன்னம்பிக்கை கொள்ளக்கூடாது என்று இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா எச்சரித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தடுப்பூசியின் முதல் அளவைப் பெற்ற மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுக் காமல் செயற்படுகின்றனர் என ஆங்கில ஊடகம் ஒன் றுக்கு அவர் தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கையில்–

முதல் டோஸ் எடுத்துக்கொள்வது கொரோனா வைர ஸிலிருந்து யாருக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை அளிக் காது. இரண்டாவது டோஸ் பெற்றுக் கொண்டால் மாத்தி ரமே இது முழுமையடையும்.

எனினும் முதல் டோஸைப் பெற்ற மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை தொடர்ந்து பின்பற்றவும், முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

இந்தியா நன்கொடையாக அளித்த தடுப்பூசிகளைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான மக்களுக்கு முதல் டோஸ் வழங்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளின் புதிய பங்குகள் பெறப்பட்ட பிறகு இரண் டாவது டோஸ் வழங்கப்படும் என்று கூறினார்.

இதேவேளை, நீண்ட வார இறுதி விடுமுறை வருவ தால், மக்கள் கொழும்பிலிருந்து வெளியேறத் திட்டமிட் டுள்ளனர். எனினும் நீண்ட வார இறுதி விடுமுறையை முன்னிட்டு பயணக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் ஜெனரல் சவேந்திர சில்வா கூறினார்.

# கடற்றொழிலாளியின் சடலத்தை நாட்டுக்கு எடுத்துவர அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு!

மாலைதீவில் இருக்கும் இலங்கை கடற்றொழிலாளியின் சடலத்தை நாட்டுக்கு எடுத்து வந்து உறவினர்களிடம் கையளிப்பதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மேற்படி சடலத்தை நாடடுக்கு எடுத்து வருவதற்குத் தேவையான 9 லட்சத்து 72 ஆயிரத்து 847 ரூபாக்களை கடற்றொழில் அமைச்சால் வெளிநாட்டு விவ காரங்கள் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சடலங்களை நாடடுக்குக் கொண்டு வரு வதற்கான ஒழுங்கு நடவடிக்கைகளை வெளிநாட்டு அலு வல்கள் அமைச்சு மேற்கொண்டுள்ள நிலையில், இன்னும் சில நாள்களில் உயிரிழந்த கடற்றொழிலாளியின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்றொழிலாளர்களின் படகு, காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அந்தப் படகு மாலைதீவு கடலோரப் பாதுகாப்பு படையினரிடம் சிக்கியது.

இதன்போது, உயிரிழந்த நிலையில் கடற்றொழிலாளர் ஒருவரின் சடலத்தை மாலைதீவு அதிகாரிகள் மீட்டிருந்தனர்.

இதனையடுத்து உயிரிழந்தவரின் உறவினர்களின் வேண்டுகோளுக்கிணங்க சடலத்தை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதற்கான செலவையும் கடற்றொழில் அமைச்சின் ஊடாகச் செலுத்துவதற்கு அறி வுறுத்தியமைக்கமைய மேற்படி நிதி வெளிநாட்டு அலுவல் கள் அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# எதிர்பார்ப்புகளுக்கு முரணானதாகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை!

## அஷோக அபேசிங்க காட்டம்



உயிர்த்த ஞாயிறு தாக்கு தல் தொடர்பில் சமர்பிக்கப்பட் டுள்ள அறிக்கை முழுமையற் றதாகும். பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட தரப்பினரின் எதிர் பார்ப்பிற்கு முரணாகவே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள் ளது. இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தும்என்றுநாடாளு மன்ற உறுப்பினர் அஷோக அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சி தலைவர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்கு தல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட் டுள்ள அறிக்கை முழுமையற் றதாகும். பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட கத்தோலிக்க ஆயர் சபை, கத்தோலிக்க மக்கள் என அனைவரும் எதிர்பார்த் தமை போன்றல்லாமல் இந்த அறிக்கை முற்றிலும் வேறுபட் டதாகவுள்ளது. அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக முன்னெ டுக்கப்பட்ட சதித்திட்டமே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களாகும். இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி நாட்டு மக்களுக்கு தெளிவு படுத்தும்.

நாட்டைப் பாதுகாக்கக் கூடிய வீரர் என்று கருதியே 69 லட்சம் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்தனர். ஆனால் தற்போது அவரிடமிருந்து நாட்டை பாதுகாக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மரங்களை வெட்டி சட்ட விரோ தமாகக் காடழிப்பவர்களைக் கூட கைது செய்ய முடியாத அரசாங்கத்துக்கு எவ்வாறு தேசிய பாதுகாப்பை உறுதிப் படுத்த முடியும்? எனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி நாட்டை பொறுப்பேற்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

தற்போது சமர்ப்பிக்கப்பட் டுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்கு தல் அறிக்கையைக் கொண்டு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியையோ அல்லது அவர்களுடன் தொடர் புடையவர்களையோ கைது செய்ய முடியாது. இது தொடர் பில் பேராயரும் விரைவில் அவரது நிலைப்பாட்டை மக்க ளுக்கு அறிவிப்பார் என்று எதிர்பார்க்கின்றோம் என்றார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## வீட்டுத்தோட்டத்தை திட்டமிடும் போது கவனிக்க வேண்டியவை

* பயிர்களுக்கு ஏற்ப இடத்தை தெரிதல்.
* நாளாந்த வீட்டுத்தேவைக்கு ஏற்றதும், போசனைப் பெறுமானம் கூடியதுமான பயிர்களை தெரிவு செய்தல்.
* வீட்டிலும் சுற்றாடலிலும் உள்ள வளங்களைப் பயன்படுத்தல்.
* இடம், நேரம், முயற்சி, தாவர,விலங்குக் கழிவுகள்.
* வருடம் முழுவதும் அறுவடை பெறக்கூடிய விதத்தில் திட்டமிட்டு பயிர்களை நடுதல்.
* சுழற்சி முறையில் பயிர்ச் செய்கையை தொடர்ச்சியாக செய்தல்.
* வேலி ஓரங்களில் முருங்கை, அகத்தி, பப்பாசி, மூலிகைச் செடிகள் போன்றவற்றை நடல்
* மரத் தேவைக்காக நடுவதற்கு உத்தேசிக்கும் மரங்களை வீட்டை விட்டு தூரத்தில் நடுதல்.
* சமையலறைக் கழிவுகள், பயிர்க் கழிவுகள், குப்பை கூழங்களை சேமித்து கூட்டெரு தயாரித்து பயிர்களுக்கு இட்டு பயன் பெறல்.
* நிழல் உள்ள இடங்களில் மிளகு, மஞ்சள், இஞ்சி, சேம்பு போன்ற பயிர்களை நடுகை செய்யலாம்.
* நீர் வடிப்புள்ள, சூரிய வெளிச்சமுள்ள இடங்களில் கங்குன், பொன்னாங்காணி, கொஹில போன்ற இலை மரக்கறிகளை நடுகை செய்யலாம்.
* பூக்கள், அலங்காரத் தாவரங்கள் ஆகியவற்றை வீட்டின் முன்புறம் நட்டு அழகிய சூழலை ஏற்படுத்தலாம்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி



# சேவைநலன் பாராட்டு விழா

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 30 வருடங்களுக்கும் மேலாகத் தாதிய பணியில் அரும்பெரும் சேவையாற்றி - எமது நோயாளர் நலன்புரிச் சங்கத்தில் ஆயுட்கால உறுப்பினராக இணைந்து - நிர்வாகசபை உறுப்பினராகிப் பல வருடங்கள் வைத்தியசாலையின் பல்வேறு வளர்ச்சிப் படிகளிலும் தன்னை அர்ப்பணித்து உழைத்த உத்தமர்

## திரு.சோ.இராசேந்திரன்

அவர்கள் 09 - 01 - 2021 ஆம் திகதி மணிவிழாக் கண்டு அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார். அவரது ஓய்வுக்காலம் சிறக்கவும், தொடர்ந்தும் பற்பல சமூப்பணிகள் ஆற்றவும் நீடுழிவாழவும் வாழ்த்தி உவந்தளிக்கப்பெற்ற வாழ்த்துப்பாமாலை








அரச கடமையை உயரிய சேவையெனக் கருதி
ஆற்றிடும் உம் சேவைகள் சொற்களில் அடங்கா
ஆயிரம் நூலெழுதிடினும் முடிவுறாதாம் - உம்
அரிய சேவைகளை நான் சுருக்கிச் சொல்வேன்!

தெல்லிநகர் பதிதனில் நலிந்த மக்கள் சேவையாற்றி
தொள்வினை களைந்துநல் சுகாதாரத் துறையினூடே
தெரியாதோர் யாருமின்றி யனைவருடனும் பழகிடு - நல்
தேவன் இராசேந்திரனே நீ வாழி நீடு!

நோயோடு வந்த நொய்ந்த மனத்தோனுக்கு
நோகாத சொற்களால் அன்புவார்த்தை பலபேசி
நோயாளர் நலன்புரிச் சங்கத்தினூடாகவும் - நீர்
ஆற்றிய சேவைகள் காலத்தால் அழியாதவை!

தாதியத்தை தாய்மையெனக் கருதி
தாயாகிப் பலவுயிர் காத்து நற்
பண்புமிகு தாதியர் பலரை - உலகுக்கு
ஈந்த உத்தமரே நீர் வாழிநீடு!

வைத்திய சாலையின் ஒவ்வொரு படிநிலைகளும்
வாயார உம் சேவைகளை வாழ்த்தி நிற்கும்
இடம்பெயர்வு, மீள்குடியேற்றமென அனைத்திலும் - நம்
ஆதார நிறுவனத்தைத் தாங்கி நின்றீர்!

அணியணியாக அன்பர்கள் வாழ்த்திட
மணிவிழாக்காணும் மகிமையும் பெற்றீர்!
மங்களந் தங்கிடுநல் இன்றைய நாளில்
மங்காப்புகழ்கொண்ட அத்தியட்சகர் ஐவரும்
மானிடத்துக்கு நீராற்றிய சேவையை விதந்து
மனதார வாழ்த்திடும் பெருமையும் பெற்றீர்!
தீர்க்க ஆயுள்கொண்டு நீர் வாழ்ந்திட - நாம்
வாழ்க பல்லாண்டெனவே வாழ்த்தி மகிழ்கிறோம்!







நோயாளர் நலன்புரிச் சங்கம்,
ஆதார வைத்தியசாலை,
தெல்லிப்பழை.

காலைக்கதிர்
Kalaikkathir

ஈழத்துச் சிதம்பர யாத்திரை 17

# யாத்திரை நிறைவு



வே.வரதசுந்தரம்

**பரமனை மதித்திடாப் பங்கயாசனன்**
**ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்**
**குருதியு மகந்தையும் கொண்டு தண்டமுன்**
**புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்**

ஈழத்துச் சிதம்பர யாத்திரை வந்த சிவனடியார்கள் இப்பாடலைப் பாடி இத்தலத்தில் வைரவர் வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். இப்பாடல் கூறும் பொருளில் லயித்துப் போகின்றனர்.

முப்புரங்களை அழித்த சிவனார் பிரமன் முதலியோரைத் தண்டிக்க வேண்டி, மறக்கருனை கொண்டு எடுத்த அருள் நிறைந்த மூர்த்தமே வைரவ மூர்த்தம். சிவனார் மகன் வைரவர். வைரவர் கையில் சிவனது கரங்களில் உள்ளவாறு சூலாயுதம் உண்டு. வைரவர் பிரம்மனின் தலைகளில் ஒன்றைக் கிள்ளி வானவர் செருக்கையும் அடக்கினார். ‘பிரமன்றன் சிரமரிந்த பெரியோய் போற்றி’ என்று அப்பர் பாடுவார்.

வைரவர் கரத்தில் உள்ள முத்தலைச் சூலத்தைத் தம்மைப் பிணித்துள்ள ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகைச் சிறுமை நீக்குமாறு அடியார்கள் வேண்டுவர். இதனால் சூலாயுதம் ஏந்திய வைரவரைச் சிவவடிவமாகப் போற்றுவர். சிவனடியார்கள் ஈழத்துச் சிதம்பரத் தலத்திலுள்ள அரசடிச் சிவஞான வைரவர், தினகரன்பிட்டி வைரவர் சுவாமி ஆகியோரை வழிபடுகின்றனர். அவர்தம் அற்புதங்களை, அருளை அறிந்து வியக்கின்றனர். இங்கெல்லாம் நடைபெறும் பொங்கல் நிகழ்வுகளை மெச்சுகின்றனர்.

இத்தலத்தில் இரண்டாம் வீதியில் உள்ள அரசமரத்தின்கீழ் ஆண்டி முனிவர் வைத்து வழிபட்ட சூலம் உண்டு. அதேவாறு, மூன்றாம் வீதியின் மேற்கில் தினகரன்பிட்டி என்னும் இடத்தில் தினகரன் முனிவர் வழிபாடு செய்த சிவஞான வைரவர் உண்டு. சிவஞான வைரவர் ஆலயத்திற்குத் தலவிருட்சம் வேண்டும் என்று நாட்டம் கொண்டு தினகரன் முனிவர் ஓர் ஆலங்கன்று ஒன்றை இங்கே நாட்டினார்.

இத்தலத்தில் அடியார்கள் பேணும் வைரவர் வழிபாடு பலஅற்புதங்களைத் தருவது. அங்குள்ள மக்கள் ஏதேனும் பொருள்களை இழப்பின் வைரவரிடம் முறையிட்டு நேர்ந்து வைப்பர். இழந்த பொருள் அவர்தம் கைவந்து சேரும். ‘நேர்த்தி செய்தால் நேரது வந்து சேரும்’என்பர்.

**அவ்வடிவை நாடோறுங் காதலித்து**
**வழிபடுவோ ராக்கங் காண்பர்**
**கவ்வைதரும் பகைவரெலாஞ் செருக்கடங்கி**
**நண்பரெனக் கலந்து வாழ்வர்**
**வவ்வுபொருள் தமைக்கள்வர் வழங்கிடுவர்**
**மலர்மங்கை மகிழ்ந்து வைகுஞ்**
**செவ்வைமனச் சீர்பெறுவர் முனிவரட்ட**
**சித்தி பெற்றுத் திகழ்வரன்றே!**

இத்தலத்தில் வைரவர் பொங்கல் சிறப்புடைத்து. அரசடி சிவஞான வைரவருக்குத் தைத்திங்கள் முதலாம் நாளில் பொங்கல் நடைபெறும். அவ்வாறே தினகரன் பிட்டி வைரவசுவாமி பொங்கல் வைகாசித் திங்களில் விசாகநாளில் நடைபெறும்.

காரைநகர் மக்கள் ஆசாரம் பேணிப் பக்தி உணர்வுடன் இப்பொங்கலைச் செய்வர். கோயில் வீதியை நன்றாகப் பெருக்கிச் சுத்தம் செய்வர். நீர் தெளிப்பர், பந்தரிடுவர். வெள்ளைச்சேலை கட்டுவர். வாழைநாட்டி, இளநீர்க் குலைகள் தூக்கி, மகரதோரணம், மாவிலை கட்டுவர். ஈழத்துச் சிதம்பர ஆலயப் பாதுகாவலர் தலைவர் நாயகப் பானையை முதலில் வைப்பார். வழிபாடு செய்து தொடக்கி வைப்பார். பின்னர் அடியார்கள் தொடர்ந்து பொங்கல் செய்வர். இக்காட்சியைப் படம் பிடித்துக் காட்டும் ஈழத்துச் சிதம்பரப் புராணப் பாடல் ஒன்று.

**கோயிற் பக்கம் மிகப்பெருக்கி**
**குளிர்நீர் தெளித்து மணப்பந்தர்**
**குலவவெள்ளைத் துகில் கட்டிக்**
**கோலத் தாழைக் குலைதூக்கி**
**மேய வாழைபல நாட்டி**
**வேண்டும் மகர தோரணமும்**
**மேலாந் தொங்கல் மாவிலையும்**
**மேவத் தொடுத்து வனப்பாக்கி.**
**ஆய அடுப்பு வைத்தழக**
**ஆழகி கோயில் அதிகாரி**
**அணியார் கலசப் பானையிட்டே**
**ஐயா பொங்கல் கொள்ளுமெனத்**
**தூய நெஞ்சான் மிகநனைந்து**
**தொன்மைப் பொங்கல் தொடக்கிவிடத்**
**தொண்ட ரூரார் எல்லோருந்**
**தொடர்ந்து பொங்கல் செய்வாரால்**

இவ்வடியார்கள் ‘ஐயாபொங்கல் கொள்ளும், கொள்ளும்’ எனவைரவரை வேண்டுவர். வைரவருக்குப் பொங்கலுடன், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் ஆகிய முக்கனிகளையும் படைப்பர். வைரவருக்கு வடைமாலை சாத்திவழிபடுவர்.

**நாடுசெழிக்க மழைபெய்ய**
**நலமார்விளைவு கழனிதர**
**நன்மைபுரியும் வைரவரே.**

ஈழத்துச் சிதம்பரத் திருத்தல யாத்திரை வந்த சிவனடியார்கள் இங்கே சில நாள்கள் தங்கி, இவ்வூர் மக்களின் விருந்தோம்பலில் மகிழ்ந்து பூரணைதேவி, புட்கலாதேவி சமேத ஐயனாரையும், சௌந்தாரம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானையும் வணங்கி இறைவழிபாட்டில் திளைத்து நிற்கின்றனர்.

இறைவன் சிந்தனையில் மனம் ஒன்றி ஆன்ம ஈடேற்றமே அவர்தம் குறிக்கோளாகிறது. தாம் நடந்து வந்தபாதையைத் திரும்பிப் பார்க்கின்றனர். அது சாமாறு என்று உணருகின்றனர். தமது மனம், வாக்கு, காயம், மூன்றிலும் மாற்றம் காணவேண்டும் என்று துடியாய்த் துடிக்கின்றனர்.

ஆமாறு செல்ல வேண்டும் என்ற உறுதிமிக்க



திண்ணிய நெஞ்சினராக மாறிவிட்டனர். ஒருபுறம் சைவசமய ஆசாராங்களைச் சீலத்தைப் பேணி உள்ளத்தேயும், புறத்தேயும் புனிதமடைய விரும்புகின்றனர். மறுபுறம் நடமாடும் நபருக்கு சேவைசெய்து, அன்புசெய்து படமாடும் பாமரர்க்குப் பணிசெய்யவேண்டும் என்றுதெளிவு பெறுகின்றனர். அன்பு, சேவை இரண்டுமே அவர்தம் தாரக மந்திரமாகிறது. அன்பே சிவம் என்று தெளிவு பெறுகின்றனர். சமயச் சிந்தனைகள், வாழ்வியல் சிந்தனைகள் அவர்களை ஆட்கொண்டுவிட்டன.

‘சுந்தரேசப் பெருமானே! காலம் உருண்டோட நாச்செற்றுவிடும், விக்குள்மேல் வரும். நமது உடல் தளர்ந்துவிடும். காண்போர் நம்மைக் கண்டு இரங்குவர். ஐம்பொறிகள் கலங்கிவிடும். நூடி தளர்ந்துவிடும். அறிவு கலங்கிவிடும். அன்று உனைநான் வாழ்த்த முடியுமா? எனவே கூற்றுவன் வருமுன் இன்றே, இப்போதே எனை ஆட்கொள். உன்னைவிட வேறு பற்றுக்கோடு நமக்கில்லை’.

இதுவே யாத்திரை முடிவில் இவர்தம் வழிபாடாக, வேண்டுதலாக அமைகிறது.

**கொண்டல்போல் முழங்கிக் கூற்றுவன் எதிரே**
**குறுக்கிட நாடியும் தளரக்**
**கண்டவர் இரங்க ஐம்பொறிகலங்கக்**
**கண்டம் மேலைஎழுந்து உந்தி**
**மண்டிட அறிவுகலங்கும் அந்நாள்உன்**
**மலரடி வழுத்திட மாட்டேன்**
**அண்டர் சூழகலைசைப் பராபரமின்றே**
**அடைக்கலம் கண்டுகொண்டு அருளே!**

(முற்றும்)

## முருங்கன் சமுர்த்தி வங்கி கனனி மயப்படுத்தப்பட்டது!



மன்னார் – நானாட்டான் பிரதேசத்திற்குற்குட்பட்ட முருங்கன் சமுர்த்தி வங்கி கணினி மயப்படுத்துவதற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த புதன்கிழமை மாலை முருங்கன் சமுர்த்தி வங்கியில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மெல் கலந்துகொண்டு கணினி செயற் திட்டத்தை ஆரம்பித்தது வைத்தார்.

மேலும் குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் நானாட்டான் பிரதேச செயலாளர் , மன்னார் சமுர்த்தி அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## நிதி மோசடி வழக்கிலிருந்து மஹிந்தானந்த விடுதலை!

தொழிற்சங்கத்துக்கு சொந்தமான நிதியை தவறாக பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கிலிருந்து அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வழக்கிலிருந்து அவரை விடுவிப்பதாக கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று(வியாழக்கிழமை) அறிவித்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் இயங்குகின்ற ஸ்ரீலங்கா சுதந்திரத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருந்தபோது, அந்த தொழிற்சங்கத்துக்குச் சொந்தமான 39 லட்சம் ரூபா நிதியைத் தவறாக பயன்படுத்தியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நுவரெலியா மாவட்டத்தின் ஒரு பகுதி தனிமைப்படுத்தல்

நுவரெலியா மாவட்டத்தின் ஒரு பகுதி தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவிற்குட்பட்ட செபல்டன் தோட்டத்தின் பிரிவே இவ்வாறு நேற்று (வியாழக்கிழமை) உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## கிண்ணியாவில் டைனமைட்டுடன் வைத்தியர் உள்ளிட்ட இருவர் கைது!



திருகோணமலை - கிண்ணியா பகுதியில் டைனமைட் மற்றும் சேவா நூலுடன் ஆயுர்வேத வைத்தியர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 37 டைனமட் குச்சுகளும் டைனமைட்டை வெடிக்க வைக்கும் 372 அடி சேவா நூலும் கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை கடற்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அண்ணல் நகர், கிண்ணியா- 3 பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதான ஆயுர்வேத வைத்தியரும், ஜாவா நகர், கிண்ணியா - 6 ஐ சேர்ந்த 41 வயதான மீனவர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட வெடிமருந்துகள் பயங்கரவாத செயற்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் இதன் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்கின்றனர் எனத் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களையும் கைப்பற்றப்பட்ட வெடி பொருள்களையும் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

# ஈழத்தமிழ் மக்களுக்கு அபயம் தர யார் வருவார்கள்? எலிப்பொறிக்குள்ளிருந்து பார்க்க வேண்டிய நிலை!

– சட்டத்தரணி செ. ரவீந்திரன் –



“அந்த நாள்களில் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஒபாமா, “சர்வதேச சமூகம் , ஐ. நா. போன்றவற்றால் தமிழ் மக்களைக் காப்பாற்ற முடியவில்லை, அதுபோலவே ருவண்டா, ரொகிங்கியா முஸ்லிம் மக்களையும் காப்பாற்ற முடியவில்லை என்றும், அதற்குரிய கட்டு மானங்கள் அதை நடை முறைப்படுத்தவில்லை எனவும் தனது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்.”

ஐ.நாவின் மனித உரிமைப் பேரவையானது மேலும் காலம் தாழ்த்தக்கூடாது, இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை ஓர் இனக்கொலையாக சர்வதேச குற்றவியல் மன்றுக்கு பாரப்படுத்தவேண்டும் என்பதற்காக தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டங்கள் கூடி, காத்திரமான தீர்மானங்கள் தேடி, பேரவையின் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார்கள்.

அது புலம்பெயர் தமிழ் சமூகத்திலும் பரவலான ஆர்வத்தை ஏற்படுத்தியது.

அந்த நாள்களில், காலைக்கதிர் இதழ்களில் ‘கரப்பருந்த நாடும் கடன்’, ‘இலவு காத்த கிளிகள்’ என்று இரண்டு பதிவுகள் எழுதியிருந்தேன்.

இலங்கை விவகாரத்தையொட்டி, ஐ. நா. மனித உரிமைப் பேரவை காத்திரமான தீர்மானம் தர வேண்டும். குற்றவியல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்படவேண்டும் என்பவற்றுக்கு வலுச்சேர்க்கும் வகையில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சிப்பேரணியும் வெற்றிகரமாக



நடத்தப்பட்டது.

எப்படி அழுதாலும் தன் பிள்ளையைத் தானேதான் பெறவேண்டும் என்ற அனுபவ மொழி ஒன்றுண்டு. மக்கள்தான், தாம் எவ்வளவு துன்பப்பட்டாலும் தமது உரிமைகளையும் அதிகாரங்களையும் நிர்ப்பந்தித்துப் பெறல்வேண்டும்.

யார் யாரோ அதனை, பெற்றுத்தருவார்கள் என்று விரும்புவது இலகுவாக இருக்கலாம். ஆனால், அது இலட்சியம் அல்ல, நடைமுறைச் சாத்தியமும் அல்ல.

இவற்றால் ஒரு விடிவு வரும் என்ற நம்பிக்கையில், கருக்கட்டியுள்ள குழந்தையால் சந்தோஷம் கிட்டும் என்று தமிழ்மக்களும் சந்தோஷப்பட, அவற்றை ஊடகங்கள் பிரதிபலிக்க, குழந்தைக்கு யார் தந்தை.. என்று எங்களுக்குள்ளேயே அடிபடுகிறோம்.

இந்த அடிபாட்டில் தாயின் உணர்வுகளைப் பற்றிய எந்த சிந்தனைகளும் இல்லை.

எங்களது ஊடகங்களுக்கும் கடமைகள், சவால்கள், தார்மீகம் என்பன உண்டு.

அந்தக் கடமை சவால்களுக்கு இடையிலும், இவற்றை மேலோங்கி, இனத்தின் இலட்சியம் – விடிவு என்ற உணர்வில் ஒரு தார்மீகக் கோட்பாடும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

அந்தக்கடமைகளை நகர்த்தும் பாணியில் இந்த தார்மீகம் ஏற்பட வேண்டும்.

தங்களது வாசகர்களுக்கு நடக்கின்ற செய்திகளை எடுத்துச்சொல்லும் கடமையும் அவர்களது விருப்பு வெறுப்புக்களை பகிர்தலும் தவிர்க்கமுடியாதவை.

ஆனால், இவற்றில் அடக்குமுறைக்கு எதிராக ஜனநாயக ரீதியாக ஒரு போராட்டம் நிகழும் வேளையில் சிண்டுபிடித்து சமுதாயக் கடமைப்பாடு இல்லாமல் நடப்பது, வருத்தம் தருகிறது.

செய்திகளைத் தரும் விதத்தில் முக்கியமாக யார் தந்தை என்ற புரளிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவற்றை பேசுவோருக்கு கிரீடமும் வைத்து, வாசகர்களின் உணர்வுகளுக்கு அன்றி, அறிவுக்கு தீனி போடுவதாகத் தெரியவில்லை. அதே போன்று இதை யார் சிந்தித்தார், தொடங்கினார், எங்கே,எப்படி முடிப்பது போன்றவற்றை மிகைப்படுத்தி, போராட்டத்தின் பலாபலன்களையே வீணாக்குகிறார்கள்.

இன முரண்பாடுகளுக்காக இவை போன்றவை சிங்கள – ஆங்கில ஏடுகளிடையேயும் கடைப்பிடிக்கப்படுகின்றன. அவற்றிற்கு நாம் வீழ்ந்துவிடக்கூடாது.

கம்பவாரிதி ஜெயராஜ் அடிக்கடி தமிழுன் என்று ஓர் இனமுண்டு, அவர்க்கோர் ஒரு குணமுண்டு என்று சொல்லுவார். அந்தக்குணங்களால் அந்தக்கருவே கலைந்துவிடலாம், அல்லது வேறு காரணிகளால் அது பிறக்கும் சாத்தியமே இல்லாமல் ஆகலாம் போல் தெரிகிறது. தமிழன்னை எவ்வளவுதான் நொந்தாலும் எல்லாமே அவளின் ஏமாற்றப் பாதையிலேயே நடைபோடுகிறது.

நான் ஒரு அவநம்பிக்கையாளன் அல்லன், ஆனால் நம்பிக்கைகளின் அறிகுறிகள் மேகங்கள் போல் கரைந்து போவதுதான் ஜீரணிக்கமுடியாதிருக்கிறது.

இதற்கு முத்தாய்ப்பு வைப்பதுபோல் சில நாள்களுக்கு முன்னர் உலகத்தமிழர் பேரவையின் இணைக்கப்பாட்டுடன் நடந்த இணையவழி சந்திப்பில், ஐ. நா. சபையின் முன்னாள் உதவிச் செயலாளர் நாயகம் சார்ள்ஸ் பெற்றி, ஐ.நாவை நம்பாதீர்கள். அதற்கு நீங்கள் விரும்பும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான ஆற்றல் உள்ள கட்டமைப்புகள் இல்லை. இறுதி யுத்தத்தில் பொதுமக்களை காப்பாற்றுவதில் ஐ. நா.வின் அங்கத்துவ சபைகள் எல்லாமே தோற்றுவிட்டன. – என்று கூறுகிறார்.

இவர் இறுதி யுத்தத்தில் ஐ. நாவின் செயற்பாடுகள் குறித்த மீளாய்வுக்குத் தலைமைதாங்கி அறிக்கை சமர்ப்பித்தவர்.

அதே இணையவழி சந்திப்பில், சரணடைந்த முக்கிய புலிகள் எல்லோரும் கொல்லப்பட்டுவிட்டனர் என்று முன்பு பாதுகாப்புச் செயலாளராகவிருந்த கோட்டாபய ராஜபக்ஷ தனக்கு கூறினார் எனவும், தேவையற்ற விசாரணைகளில் ஈடுபடாமல் இருக்கவே சுட்டுத்தள்ளினேன் என்று ஏற்றுக்கொண்டார் எனவும் தகவல் தருகிறார் இன்னொருவர். இவர் வேறு யாருமல்லர். அப்பொழுது அமெரிக்காவின் யுத்த விவகாரங்கள் தொடர்பில் உயர் அதிகாரியாகவும் விசேட தூதுவராகவும் இருந்த ஸ்ரிபன் ரப். அதற்கு ஆதாரமாக இளைஞர்கள், யுவதிகள் நிர்வாணப்படுத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட படங்கள் இணையத்தளங்களில் வந்தன.

அவற்றில் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் ஏதும் அறியாத கலங்கமில்லாத கண்களோடு காத்திருக்க வேட்டையாடப்பட்ட படங்கள் உலகடங்கிலும் எல்லோர் மனங்களையும் உலுப்பின. இவற்றைத்தான் அந்த நாள்களில் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஒபாமா, “சர்வதேச சமூகம் , ஐ. நா. போன்றவற்றால் தமிழ் மக்களைக் காப்பாற்ற முடியவில்லை, அதுபோலவே ருவண்டா, ரொகிங்கியா முஸ்லிம் மக்களையும் காப்பாற்ற முடியவில்லை என்றும், அதற்குரிய கட்டுமானங்கள் அதை நடைமுறைப்படுத்தவில்லை எனவும் தனது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்.

இவையெல்லாம் தமிழர்களை பொறுத்தளவில் கண்கெட்டபின் சூரிய நமஸ்காரமா? அல்லது கோழித்தூக்கத்தின் விழிப்பா, முதலைக்கண்ணீரா..? என்பது தெரியவில்லை.

ஏனென்றால் அப்போது இருந்த எல்லோரும், இவர்கள் கூட யுத்தம் முடிந்த பின், ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பயங்கரவாதத்தை அழித்து உலகுக்கு முன்மாதிரி காட்டியவர் என்று புகழாரம் சூட்டிய தீர்மானத்தை நிறைவேற்றியவர்கள்தான்.

அப்பாவித் தமிழ்மக்கள் இறந்தார்கள் என்பது அப்பொழுது அவர்களுக்குத் தெரியவில்லையா..? அல்லது நடந்த யுத்தக் குற்றங்கள் மறைக்கப்பட்டனவா..? ஏனெனில் நீதி, நியாயம் எப்பேற்பட்டவையானாலும் சர்வதேச அரசியலுக்கு பின்னால் இயங்கும் வர்த்தக கும்பலுக்கு ராஜபக்ஷ வசதியானவராகத் தெரிந்தார்.

(மிகுதி நாளை...)



காலைக்கதிர்
Kalaikkathir

# மனித உரிமை ஆணையரின் பரிந்துரைகளை திட்டவட்டமாக நிராகரித்தது இலங்கை அரசு!

## வெளிவிவகார அமைச்சர் தினேஷ் தமது உரையில் தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் முன்வைக்கப்பட்ட - இலங்கை தொடர்பான ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள்ஆணையாளரின் அறிக்கையில் உள்ள முடிவுகளையும் பரிந்துரைகளையும் இலங்கை திட்டவட்டமாக நிராகரிப்பதாக வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று மெய்நிகர் முறையில் ஆற்றிய உரையில் கூறப்பட்டவை வருமாறு:-

கடந்த ஆண்டு இந்த சபையின் 43 ஆவது அமர்வில் இலங்கை அரசாங்கம் இணை அனுசரணையிலிருந்து விலகுவதாக அறிவித்த தீர்மானம் 30/1 மற்றும் 40/1 ஆகியவற்றிலிருந்து வெளிவருகின்றது.

சுயமரியாதை, இறையாண்மை கொண்ட எந்தவொரு நாட்டிற்கும், முக்கியமாக ஆட்சி தொடர்பான பல பிரச்சினைகள் மற்றும் உள்நாட்டு விடயங்களை உள்ளடக்கி, நியாயமற்ற முறையில் தனது நோக்கத்தை விரிவுபடுத்திமேலும்ஆணையிட்டுள்ளஆணையாளரின் அறிக்கையை இலங்கை நிராகரிக்கின்றது. இது ஐ.நா. சாசனத்தின் 2 (7) ஆவது பிரிவான தற்போதைய சாசனத்தில் உள்ள எதுவும் ஐக்கிய நாடுகள் சபைக்கு எந்தவொரு அரசினதும் உள்நாட்டு அதிகார எல்லைக்கு உட்பட்ட விடயங்களில் தலையீடு செய்வதற்கு அங்கீகாரம் அளிக்காது - என்ற விதியை முழுமையாக மீறும் செயலாகும்.

பரிந்துரைகள் மற்றும் முடிவுகள் தொடர்பாக வெளிவந்த பாதையானது, இலங்கைக்கு எதிராக இடைவிடாமல் தொடர்ந்த முன்கூட்டிய, அரசியல்மயப் படுத்தப்பட்ட மற்றும் பாரபட்ச மற்ற சில கூறுகளின் நிகழ்ச்சி நிரலைப் பிரதிபலிக்கின்றது. இந்தப்பரிந்துரைகள் தவறான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அமைந்தவை.

ஆணையாளரின் அறிக்கையில் உள்ள முடிவுகளையும் பரிந்துரைகளையும் இலங்கை திட்ட வட்டமாக நிராகரிக்கின்றது.

முப்பது ஆண்டுகளாக வெளியிடப்படாத மற்றும் அவற்றுள் சில ஆணையாளரின் அலுவலகத்தினால் தக்க வைக்கப்பட்டு, அணுகுவதற்கு மறுக்கப்பட்டிருந்த ஆதாரங்களின் அடிப்படையில், குறிப்பாக ஐ.நா. மற்றும் அதன் பொறி முறைகளுடன் தொடர்ச்சியாகவும் ஆக்க பூர்வமாகவும் ஈடுபட்டு வரும் இலங்கை போன்ற ஒரு நாடு தொடர்பாக, சொத்து முடக்கம், பயணத் தடைகள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தைப் பற்றிய குறிப்புக்கள் மற்றும் தனிப்பட்ட அரசுகள் உலகளாவிய அதிகார வரம்பைப் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கான அழைப்பானது, சர்வதேச சமூகம் ஒட்டுமொத்த மாகக் கவனிக்க வேண்டிய ஒரு தனித்துவமான மற்றும் சிறந்த ஆபத்தை சுட்டிக் காட்டுகின்றது. சிலநாடுகளின்இத்தகையஒருதலைப்பட்ச நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவையும் மற்றும் இயற்கை நீதியின் கொள்கைகளை மீறுவதுமாகும்.

கடந்த மார்ச் மாதத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்திற்கும் மேலதிகமாக, அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தவறான தகவல்கள், தவறான கருத்துக்கள் மற்றும் தன்னிச்சையான மதிப்பீடுகள் குறித்து இலங்கைஎழுத்துபூர்வகருத்துக்களை வழங்கியுள்ளது. ஆணையாளரின் அலுவலகம் தனது அறிக்கையை முன்னெப்போதும் இல்லாத பிரச்சாரத்துடன் இணைந்து வெளியிட்டமை மற்றும்குறித்த அறிக்கை தொடர்பான எமது கருத்துக்களை ஒரு துணை நிரலாக வெளியிட மறுத்தமை ஆகியன வருத்தமளிக்கின்றன. இது இலங்கையையும், அறிக்கை குறித்த இலங்கையின் கருத்துக்களை சமமாகக் காணும் உறுப்பினர்களையும் இழந்துள்ளது.

இந்த சபைக்கு முன்னர் விளக்கப்பட்டகாரணங்களுக்காகஇலங்கையால் நிராகரிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் தொடர்பான நிபுணர்குழுவின் மிகவும்சர்ச்சைக்குரிய அறிக்கை மற்றும் இலங்கை தொடர்பான உயர் ஸ்தானிகர் அலுவலக விசாரணை அறிக்கை ஆகியவற்றிலிருந்தான உயர் ஸ்தானிகரின் அறிக்கையில் மீளுருவாக்கம் செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்களைஇலங்கைமறுக்கின்றது. கூறப்பட்ட சர்ச்சைக்குரிய அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட அறிக்கையின் உள்ளடக்கங்கள், நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் எமது மக்களின் வாழ்க்கை உரிமை ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நியாயமான நடவடிக்கைகளுடன், சர்வதேச அளவில் தடைசெய்யப் பட்ட ஒரு பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்திய அட்டூழியங்களை சமன் செய்வதாகத் தோன்றும் உண்மைத் தவறுகளால் நிறைந்திருக்கின்றன.

தலைவி அவர்களே, இந்த சபை மற்றும் அனைத்து ஐ.நா. அமைப்புக்களுடனான எமது தொடர்ச்சியான ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாடுகள் இருந்தபோதிலும், வெளிப்புறமாக இயக்கப்படும் சக்திகளை தொடர்ந்தும் வலியுறுத்துவதானது பல சவால்களை ஏற்படுத்துவதாக அமைவதுடன், இதுபோன்ற செயன்முறைகள் ஐ.நா.வின் அனைத்து உறுப்பு நாடுகளையும் பாதிக்கும் ஆபத்தான முன்னுதாரணத்தையும் அமைக்கும்.

அரசியல் உந்துதல்களால் உந்தப்பட்டு, இந்த சபையால் இலங்கை மீது செலுத்தப்பட்டுள்ள கவனத்திற்காக நாங்கள் வருந்துகின்றோம். இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு தீர்மானமும் சபையால் நிராகரிக்கப்பட்டு மூடப்பட வேண்டும் என இலங்கை இந்த சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது.

முடிவில், இந்த சபை உட்பட ஐ.நா. மற்றும் சர்வதேச சமூகத்துடன் பரஸ்பரம் ஒப்புக் கொள்ளப்பட்ட பகுதிகளில், அரசமைப்பிற்கு இணங்க, உள்நாட்டு முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகளுக்கு ஏற்ப ஆக்கபூர்வமாக ஈடுபடுவதற்காக நாங்கள் தயாராக இருக்கின்றோம். - என்று உள்ளது.

# மனித உரிமை மீறல்கள் தொடரும் பேரபாய நிலைமை இலங்கையில்!

## ஜெனிவாவில் ஆணையர் பச்லெட் உரை




இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து 12 ஆண்டுகள் கடந்த பிறகும் அங்கு பல இடங்களில் அப்பட்டமாக மனித உரிமைகள் மீறப்படுகின்றன என ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜெனிவாவில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46ஆவது அமர்வில் நேற்று புதன்கிழமை காணொலிவாயிலாக தனது அறிக்கை முடிவு குறித்தும் தீர்மான குறிப்பு பற்றியும் விளக்கினார் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் மீஷெல் பச்லெட் அம்மையார்.

எனது அறிக்கை குறிப்பிடுவது போல, உள்நாட்டு யுத்தம் முடிந்து சுமார் 12 ஆண்டுகள் கடந்த பிறகும் கூடபாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பது உறுதிப் படுத்தப்படவில்லை. கடந்த காலங்களில் நிலவிய அதே அடக்குமுறை, துன்புறுத்தல் போன்றவை தொடர்ந்திருக்கின்றன என்று மீஷெல் பச்லெட் கூறினார்.

2015ஆம் ஆண்டில், மனித உரிமை மீறல் நடக்காதவாறு பார்த்துக்கொள்வதாக உறுதிமொழி அளித்த பிறகும், தற்போதைய அரசு, அதன் முந்தைய ஆட்சியாளர்களைப் போலவே, உண்மையை கண்டறியவும் குற்றங்களுக்கு பொறுப்புடைமையாக்கும் நடவடிக்கையிலும் தோல்வி அடைந்துள்ளது.

### உயிர் பிழைத்தவர்களின் வாழ்க்கை நிர்மூலம்

போரில் உயிர் பிழைத்த ஆயிரக்கணக்கானோரின் வாழ்வு நிர்மூலமாகியிருக்கிறது. அதுமட்டுமன்றிஅமைப்பு முறை, கட்டமைப்பு, கொள்கைகள், பணியாளர்கள் போன்றவற்றில் முந்தைய காலம் போலவே விதிமீறல்கள் தொடருகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் முக்கியமான பணி, குறைகளுக்கு தீர்வு கண்டு முந்தைய விதி மீறல்கள் நடக்காதவாறு கவனிப்பதுதான்.

கடந்தஆண்டு முக்கியபகுதிகளில் மிகக் கடுமையான கவலைக்குரிய சமிக்ஞைகள் தரக் கூடிய போக்கு தீவிரமாக இருப்பதை எமது அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

முந்தையஆண்டுகளில் வளர்ந்து வந்த சிவில் சமூக மும் தன்னிச்சையான ஊடகமும் தற்போது வேகமாக சுருங்கி வருகின்றன. நீதித் துறை சுதந்திரம், இலங்கை மனித உரிமைகள் ஆணையம், தேசிய பொலிஸ் ஆணையம் ஆகியவை சமீபத்தில் கொண்டு வரப்பட்ட 20 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் பலவீனமாக்கப் பட்டுள்ளன.

முக்கியமான சிவில் நிர்வாக பணிகளில் வளர்ந்து வரும் இராணுவத் தலையீடு, ஜனநாயக ஆளுகை மீதான ஆக்கிரமிப்பாக பார்க்கப்படுகிறது. பிரத்தியேக சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதில் காணப்படும் தொடர்ச்சியான தோல்வி அல்லது விதிமீறல்களுக்குக் காரணமானவர்களை அடையாளம் காணாமல் இருப்பது, கொடூரமான குற்றங்கள் மற்றும் விதிமீறலில் குற்றம்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளைப் பொறுப்புடைமைக்கு ஆளாக்காமல் விட்டுள்ளமை போன்றவை அரசின் அலட்சியத்தைக் காட்டுகின்றன.

தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினர், அரசின் உயர் பொறுப்புகள் உள்ளிட்ட பணிகளில் சேராத வகையில், பிளவு படுத்தக் கூடிய மற்றும் தவறான சொல்லாடல்களால் தவிர்க்கப்படுகிறார்கள்.

### சிறுபான்மை சமூகங்கள் கவலை

கொவிட்- 19 சடலங்கள் கட்டாயப்படுத்தப்பட்டு தகனம் செய்யப்படுவது முஸ்லிம் மற்றும் கிறிஸ்துவ சிறுபான்மை சமூகங்களுக்கு வலியையும் சங்கடத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமானால், நீண்ட கால அடிப்படையிலான அமைப்பு சார்ந்த பிரச்சினைகள் இலங்கையில் தொடருகின்றன.

கடந்த கால வன்முறைகள், இப்போதும் தொடரலாம் என்ற அபாய செய்தியின் அறிகுறி தெளிவாக தென்படுகிறது. அடுத்து வந்த அரசுகள், உண்மையை யும் பொறுப்புடைமையையும் உறுதிப்படுத்துவதில் தோல்வி அடைந்து விட்டன. உண்மையில், மனித உரிமைகள் வழக்குகளில் அரசாங்கம் நீதி நடைமுறைகளுக்கு தடங்கலை ஏற்படுத்தியி ருக்கிறது.

முந்தைய ஆணையங்களின் கண்டு பிடிப்புகளை மறுஆய்வு செய்வதற்காக கடந்த ஜனவரியில் அமைக்கப்பட்ட ஆணையமும், அர்த்தமற்ற முடிவின்றி அதே பாணியை தொடர்ந்திருக்கிறது. ஆணையம் முன்பு வழங்கிய பரிந்துரையை அமுல்படுத்தாதவண்ணம், உண்மையான முன்னேற்றத்தை தேசிய நடைமுறைகள் மூலம் செயல்படுத்தும் வாய்ப்பை அரசு மூடிவிட்டது.

இதுபோன்ற காரணங்களால், புதிய வகையிலான பொறுப்புணர்வை உள்ளடக்கிய தீர்வை ஆராயவும் எதிர்காலத்தில் உறுப்பு நாடுகளில் நிலவும் மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களை உறுதிப்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் வழி முறைகளை கையாளவும் வலியுறுத்துகிறேன். - என்று மீஷெல் பச்சலெட் தெரிவித்தார்.

# வத்திராயன் கடற்கரையை அண்டி ஏவப்பட்ட பரா வெளிச்சக் குண்டு!

## கடத்தல்காரர்களின் சமிக்ஞையா?

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.26

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்கரையை அண்டிய பரட்டைக் காடு உள்ள பிரதேசத்தில் நேற்று இரவு 8 மணியளவில் திடீரென பராவெளிச்சக் குண்டு ஏவி விடப்பட்டமையினால் சிறிது நேரம் அப் பகுதியில் பதற்றம் நிலவியது.

பரா வெளிச்சக்கூடு ஏவி விடப்பட்டு கடத்தல் படகுகளிற்கு வழி காட்டப்பட்டதா என்ற கோணத்தில் உடனடியாக தீவிர தேடுதல் இடம்பெற்றுள்ளது.

இதேநேரம் போர்க் காலத்தில் கைவிடப்பட்ட பரா வெளிச்சக்குண்டாக இது இருக்குமா என்ற கோணத்தில் ஆராயப்பட்டபோதும் ஏவப்பட்ட குண்



டின் எஞ்சிய பகுதிகள் அது புதிதாக இருப்பதை அடையாளப்படுத்துவதால் சந்தேகம் கொண்டு தேடுதல் இடம் பெற்றது.

இருந்தபோதும் பரா வெளிச்சக் குண்டை ஏவியவர்கள் தொடர்பிலோ அல்லது சந்தேகத்தின் பெயரிலோ எவரும் கைது செய்யப்படவில்லை. தீவிர விசாரணைகள் இடம்பெறுகின்றன.

# 13ஆவது திருத்தச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டும்!

## இரா.துரைரெத்தினம் வலியுறுத்தல்

தமிழ்மக்களின் உரிமைகள், அபிலாஷைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திடம் பல விடயங்களைத் தமிழ்க் கட்சிகள் முன்வைத்து வருகின்றன. இந்தத் தருணத்தில் நிரந்தரத் தீர்வுத் திட்டம் தொடர்பாகத் தற்சமயம் அமுலிலுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கைகளை முன்வைப்பது சிறந்ததாகும் என முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் நேற்று (வியாழக்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

கடந்த கால அரசாங்கங்கள் மாறி மாறி பல தீர்வுத் திட்டத்தை முன்வைத்தாலும் புதிய அரசின் உத்தேச வரைவை தயாரிப்பதற்கான நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தீர்வுத்திட்டம் தொடர்பாகக் கட்சிகளிடம் ஆலோசனைகளைப் பெற்று வருகின்றது.

இவ்வேளையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் 46 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெறும் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக கவனவீர்ப்பு ஏற்பட்டுள்ள நிலையில் வடக்கு கிழக்கிலுள்ள கட்சிகள், சிவில் அமைப்புக்கள், நிறுவனங்கள், மதச்சார்புள்ள, மதச்சார்பற்ற அமைப்புக்கள், சிறுபான்மை மக்கள் ஒன்று திரண்டு பொத்துவில் தொடக்கம், பொலிகண்டி வரை வெகுஜன ரீதியான ஒரு கவன வீர்ப்பை தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் அனைவரினதும் கவனத்தையும் ஈர்க்க வைத்துள்ளது.

தீர்வுத் திட்டம் தொடர்பாகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் 46 ஆவது கூட்டத் தொடர் விடயங்கள் தொடர்பாகவும் தமிழ்க் கட்சிகள் தங்களது செயற்பாடுகளை முடக்கியுள்ளன.

தமிழ் மக்களின் உரிமைகள், அபிலாஷைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திடம் பல விடயங்களை தமிழ்க் கட்சிகள் 



முன் வைத்து வருகின்றன. இத் தருணத்தில் நிரந்தர தீர்வுத் திட்டம் தொடர்பாக தற்சமயம் அமுலிலுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கைகளை முன்வைப்பது சிறந்ததாகும்.

ஏனெனில் இந்தத் திட்டம் நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியல் அமைப்பில் உள்வாங்கப்பட்டு 30 வருடங்களாக மாகாணசபை முறைமையின் கீழ் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இது அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் இலகுவாக அமுல்படுத்த முடியும். மத்திய அரசாங்கம் இதிலுள்ள பல விடயங்களை மீளப் பெற்றுக் கொண்டாலும், இணக்கப்பாட்டுடனும், சட்டரீதியாகவும் அமுல்படுத்த முடியும்.

பெரும்பான்மையான கட்சிகள் இந்தத் திட்டத்திலுள்ள நல்ல விடயங்களையும், குறைபாடுகளையும் முன்வைப்பது ஆரோக்கியமான விடயமே. பல கட்சிகள் முன்வைப்பதென்பது தற்காலிகமாக கையிலுள்ள விடயங்களை செயற்படுத்துவதற்கு சிறந்த வழியாகும்.

எனவே, தமிழ்த் தலைமைகள் எந்தளவிற்கு தேசிய ரீதியாக தமிழர்கள் தொடர்பான விடயங்களை வலுவாக முன்வைப்பதைப்போல் 13 ஆவது திருத்தச்சட்ட விடயங்களையும் முன்வைப்பது ஆரோக்கியமானதே. இந்தத் திட்டத்தை முன்வைக்கும் பட்சத்தில் இந்திய அரசின் வலுவான ஆதரவைப் பெற முடியும். என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வீட்டுக்கொரு கைத்தொழில் திட்டத்தின் கீழ் கைத்தறி உற்பத்தி நிலையம் திறந்துவைப்பு!



நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் அனுசரணையில் கிராமிய தொழில்துறை திணைக்களம் இணைந்து வீட்டுக்கொரு கைத்தொழில் திட்டத்தின் கீழ் சொறிக்கல் முனை கோழிகுறோஸ் கன்னியர் மடம் முயற்சியின் பலனாக கைத்தறி உற்பத்தி நிலையம் ஒன்று நேற்று (வியாழக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கைத்தறி உற்பத்தி நிலையத்தில் சுமார் 15 பெண் தலைமைத்துவ மற்றும் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய யுவதிகள் இணைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது வருமானத்தை மேம்படுத்தி வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதற்காக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

6 கைத்தறியும் அதற்குரிய உபகரணங்களையும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் உதவியுடன் வழங்கப்பட்டு தற்போது செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் மற்றும் கிராமிய தொழில்துறை திணைக்கள கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் கமால் நெத்மினி அருட்சகோதரர் லெஸ்லி ஜெயகாந்தன் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.அமிர்தசங்கர் ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்தனர்.

மேலும் இந்நிலையத்தை சொறிக்கல்முனை கோழிக்குறோஸ் கன்னியர் மடம் மேற்பார்வை செய்வதுடன் உற்பத்தி பொருள்களையும் சந்தைப்படுத்துவதற்கான வழிவகைகளையும் மேற்கொள்ளவுள்ளது.

கடந்த யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் இப்பகுதியில் அரச பயிற்சி நிலையம் ஒன்று இயங்கி வந்திருந்தமையுடன் பின்னர் யுத்தம் தீவிரம் அடைந்தமை காரணமாக இடம்பெயர்வு ஏற்பட்ட பின்னர் முற்றாக மூடப்பட்டிருந்தது. பின்னர் தற்போது 2021 ஆண்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வாடகைக்கு வீடு தேவை**

சைவப்புலவர் இராசையா ஶ்ரீதரனுக்கு வீடு தேவை. அவர் யாழ்.பெருமாள் கோயிலில் பணியாற்றுவதால் யாழ். நகருக்கு அண்மித்ததாக இருக்க வேண்டும். குறைந்த வாடகைதான் தர முடியும். அவரும் மனைவியும் மட்டும் இருக்க சிறிய வீடு போதுமானது. ஒவ்வொரு 5 ஆம் திகதியும் வாடகை தர சம்மதம். மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் வாழ்வதால் அவசரம் வீடு தேவைப்படுகிறது.

தொடர்புகளுக்கு:- **இராசையா ஶ்ரீதரன்**
**077 980 7223**
**021 221 3575**

# உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு மைத்திரியே பொறுப்புக் கூறவேண்டும்!

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவே அவர்மீது குற்றஞ்சுமத்தியுள்ளது. பாதுகாப்பு அமைச்சராகக் காணப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்று அன்று நாம் வலியுறுத்திய விடயங்களையே இன்று ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் நல்லாட்சி அரசாங்கத்திலிருந்த முஸ்லிம் அமைச்சர்கள் மீதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் தற்போதைய அரசாங்கத்திலுள்ளவர்களால் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது குற்றச்சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவே அவர் மீது குற்றஞ்சுமத்தியுள்ளது. ஆனால் ஆணைக்குழுவால் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள அவர் அரசாங்கத்தின் பங்காளியாகவுள்ளார். பாதுகாப்பு அமைச்சராகக் காணப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்று அன்று நாம் வலியுறுத்திய விடயங்களையே இன்று ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தத் தவறியவர்கள் தொடர்பாக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதே தவிர, அதன் பின்னணி பற்றி எதுவும் கூறப்படவில்லை. தாக்குதலின் சூத்திரதாரிகள் உள்நாட்டவர்களா அல்லது வெளிநாட்டு சக்திகளா என்பதும் குறிப்பிடப்படவில்லை. சூத்திரதாரிகள் இந்த ஆணைக்குழுவால் அடையாளப்படுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்த்தோம்.

இந்தியாவிற்கு தப்பிச் சென்றுள்ள பிரதான சந்தேகநபரான சாரா நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டால் மாத்திரமே இதன் உண்மையான பின்னணியை கண்டறிய முடியும். எனவே, இந்திய அரசாங்கத்திடம் சாராவை திருப்பியனுப்புமாறு கோரிக்கை விடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். இதற்கான முயற்சிகளை முன்னெடுக்காவிட்டால் அதிலிருந்து அரசாங்கத்தால் தப்பிக்க முடியாது. – என்றார்.

## தமிழ் மக்களின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆணையாளரின் அறிக்கை தொடர்பான ஊடாடும் உரையாடல், நேற்று மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் இடம்பெற்ற போது இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி தூதர் இந்திரா மணி பாண்டே இந்தியாவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார். அவர் கூறியவை வருமாறு:–

இலங்கை தொடர்பான ஆணஒயாளரின் அறிக்கை மற்றும் அவரது வாய்வழி கருத்துக்களை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம்.

அந்த நாட்டில் மூன்று தசாப்தங்களான் பழமையான மோதல்கள் முடிவுக்கு வந்த மே 2009 முதல் இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான 7 தீர்மானங்களை இந்தக் கவுன்ஸில் ஏற்றுக்கொண்டது. இந்த தீர்மானங்கள் தொடர்பான கலந்துரையாடல்களில் இந்தியா தீவிரமாக பங்கேற்று வருகின்றது, மேலும் இலங்கையுடன் அதன் நெருங்கிய நண்பராகவும் உடனடி அண்டை நாடாகவும் தொடர்ந்து ஈடுபட்டுள்ளது. இந்தியாவின் நிலையான நிலைப்பாடானது, இரண்டு தூண்களில் உள்ளது:

ஒன்று – இலங்கையின் ஒற்றுமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கான ஆதரவு.

மற்றையது – சமத்துவம், நீதி, அமைதி மற்றும் இலங்கைத் தமிழர்களின் கௌரவமான அபிலாஷைகளுக்கு உறுதியளித்தல்.

இவை ஒன்று அல்லது தேர்வுகள் அல்ல.

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மூலம் தமிழ் சமூகத்தின் உரிமைகளை மதிப்பது இலங்கையின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் நேரடியாக பங்களிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

எனவே, தமிழ் சமூகத்தின் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றுவது இலங்கையின் சிறந்த நலன்களுக்காக என்று நாங்கள் வாதிடுகிறோம்.

நல்லிணக்க செயல்முறை மற்றும் இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவது உள்ளிட்ட இத்தகைய அபிலாஷைகளுக்கு தீர்வு காணத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கையை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

மோதலின் முடிவில் இருந்து கிட்டத்தட்ட 12 ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பில் ஆணையாளரின் மதிப்பீடு முக்கியமான கவலைகளை எழுப்புகிறது. இந்த வியங்களிலும் இலங்கை அரசு தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. இந்த இரண்டையும் மதிப்பீடு செய்வதில், இந்த பிரச்சினைக்கு நீடித்த மற்றும் பயனுள்ள தீர்வைக் காண்பதற்கான உறுதிப்பாட்டின் மூலம் நாம் வழிநடத்தப்பட வேண்டும்.– என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறும் தேவை இல்லை

கூறுகிறார் அஜித் நிவாட் கப்ரால்



சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இல்லையென நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

'எமது பொருளாதாரத்தை புதிய பாதையை நோக்கி கொண்டுசெல்ல முடியும்.

கடன்களின் மூலமாக மாத்திரம் இதற்கான தீர்வுகளைத் தேடாது, கடனற்ற நிதி சேமிப்பின் மூலம் நாட்டை புதிய பாதையை நோக்கி கொண்டு செல்ல முடியும்.

இதற்கான தீர்மானங்களை மேற்கொண்டு, அனைவரும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்.

இந்த நடவடிக்கைகளின் பிரதிபலன்களை எதிர்வரும்காலத்தில்நாட்டில்உள்ளஅனைவரும் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

எப்பொழுதும் கடன் பெற்று செயற்படுவதால், செயற்பாடுகள் வெற்றியளிப்பதில்லை. ஒவ்வொரு வழியிலும் இதற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, சர்வதேச நாணய நிதியத்திடம் கடனை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படாது.

எனினும், தொழில்நுட்பம் உள்ளிட்ட விடயங்களில் அதன் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது' – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 45 கிலோ கிராம் ஹெரோயின் போதையுடன் இராணுவ சிப்பாய் உள்ளிட்ட இருவர் கைது!

இன்று காலை ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரிக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஹொரண பகுதியில் வைத்து 45 கிலோ கிராம் ஹெரோயினுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவ அதிகாரி ஒருவரும் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1988.04.18 | பிறந்த திகதி - 1985.08.07 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - உத்தரம் 2 | நட்சத்திரம் - அச்சுவினி |
| செவ் - ---- | சூ/செவ் - 05 |
| பாவம் - 13 1/2 | பாவம் - 45 |
| கல்வி - BA பட்டதாரி | கல்வி - MBBS |
| தொழில் - சொந்தக் கம்பனி | தொழில் - Doctor |
| எதிர்பார்ப்பு - வவுனியாவில் பெண் இருக்கவேண்டும். | எதிர்பார்ப்பு - Doctor OR Engineer |

யாழ் காலைக்கதிரில் காலை, மாலைப் பதிப்பிலும் முகநூலின் ஊடாகவும் மணமக்கள் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.
அலுவலக நேரம் - எல்லா நாள்களும் காலை 8.30 தொடக்கம் 5.30 வரை.
பதிவுக் கட்டணம் 1000 + 300
Facebook - Kalyanamalaivada.com
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
076 885 6925
077 857 8528



Anna EXPRESS Courier Services
அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம் |
| சங்கானை | பளை | மல்லாவி |
| கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார் |
| ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா |
| நெல்லியடி | முல்லைத்தீவு | கொழும்பு |


# மரண அறிவித்தல்



## திருமதி லீலாவதி விஸ்வலிங்கம்

யாழ். காரைநகர் நடுத்தெருவை பிறப்பிடமாகவும் லண்டன் Aylesburyஐ வதிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி விஸ்வலிங்கம் அவர்கள் 15.02.2021 (திங்கட்கிழமை) அன்று லண்டனில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகமுத்து - கமலம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் (முன்னாள் உரிமையாளர் நியூ விஜயா ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும்,

காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, சுந்தரமூர்த்தி அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நடராசா மற்றும் தனநாயகி, காலஞ்சென்றவர்களான குணவதி, தனலட்சுமி, தனபாலன் ஆகியோரின் மைத்துனியும்,

சசிகலா (லண்டன்), விஜயேந்திரன் (லண்டன்), பரந்தாமன் (கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும்,

ரவீந்திரன், பரமேஸ் (உஷா), செல்வராணி ஆகியோரின் மாமியாரும், சபோசினி, கிருஷ்நாத், சர்மிலன், யஸ்மிலன், ரம்யா, யாமினி, அஷ்வினி, ஹிரண்யா, ஹர்ணி, நிதேஷ் ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.02.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் 9 மணி வரை Divinity Funeral Care, 209 Kenton Road, Harrow, Middlesex, HA3 0HD என்ற முகவரியில் பார்வைக்காக வைக்கப்பட்டு, பின்னர் காலை 10 மணி முதல் 11 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று Golders Green Crematorium Hoop Lane, Golders Green, London, NW11 7NL என்ற முகவரியில் அமைந்துள்ள சேமக்காலையில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு:
சசிகலா ரவீந்திரன்(மகள் - லண்டன்): 44 075 517 57970
விஜயேந்திரன்(மகன் - லண்டன்): 44 075 787 63402
பரந்தாமன்(மகன் - கனடா): 011 647 938 3332

தகவல்: குடும்பத்தினர்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.02.2021 இல் வெளியிடப்பெற்றது.